
பக்கங்கள் 29

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆவணி 16 ஞாயிற்றுக்கிழமை 01.09.2024 | அதிர்வு 30



## நல்லூர் கந்தனுக்கு இன்று தேர்த்திருவிழா

07




### தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிக்கும்

# தமிழரசின் திருமலைக் கிளையின் முடிவு எம் ஒற்றுமைக்குச் சிறந்த எடுத்துக்காட்டு

### குகதாசன் குழுவைச் சந்தித்த பின் செல்வம் தெரிவிப்பு



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்டக் கிளை, தமிழ்ப் பொது வேட்பாளர் பாக்கியசெல்வம் அரியநேந்திரனுக்கு ஆதரவளித்து சங்கு சின்னத்துக்கு வாக்களிக்கத் தீர்மானித்த முடிவு வரவேற்கத்தக்கது என்று தமிழீழ விடுதலை இயக்கத்தின் ( ரெலோ) தலைவரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

C5

# ரணிலைத் தோற்கடித்தால் முழு நாடும் அழிந்துவிடும்

### ஐ.தே.கவின் தவிசாளர் வஜிர எச்சரிக்கை



வீழ்ச்சியடைந்த நாட்டை மீட்டெடுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வேலைத் திட்டத்தை மாற்றினால் முழு நாடும் மீண்டும் வீழ்ச்சியடையும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

எனவே, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பில்

C5




திருகோணமலை மாவட்டத்தில் இதுவரை அம்சடக்காக இருந்த தமிழரசு கட்சி எம்.பி. குகதாசன் இப்போது தமது அரசியல் சூதாட்டத்தை – கைவரிசையை – காட்டத் தொடங்கிவிட்டார் என்றே நினைக்கிறேன்.

மிக விரைவில் வரக்கூடிய நாடாளுமன்றத் தேர்தலில் தமது வெற்றி வாய்ப்பை உறுதிப்படுத்துவதற்காக தமது தமிழரசு கட்சியையும் தாண்டி காய் நகர்த்தத் தொடங்கி விட்டார் அவர் என்று தோன்றுகின்றது.

சம்பந்தனின் மறைவால் அந்த இடத்துக்கு எம்.பியாக வந்துள்ள குகதாசனுக்கு சம்பந்தன்

C5



# தேர்தல் மூலம் ஆட்சி மாற்றம் ஏற்பட்டாலும் கூட நாணய நிதிய உடன்படிக்கைக்கு பாதிப்பு இல்லை

## அனுரகுமார திஸாநாயக்க தெரிவிப்பு



“ஆட்சி மாற்றம் ஏற்பட்டால், சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கைக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது எனத் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கல்கிசையில் இடம்பெற்ற பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“தற்போது ஆட்சியாளர் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ள விரும்புகின்றார்களே தவிர புதிய வர்த்தகங்களை உருவாக்குவதற்கு விரும்பவில்லை.

விருப்பமான இடங்களில் வணிகங்களை ஆரம்பிப்பதற்குத் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் உதவி செய்யும்.

நாம் அரசாங்கத்தை மாற்றுவதற்கு அல்ல இந்த நாட்டினை அபிவிருத்தி செய்வதற்கே வாய்ப்பைக் கோருகிறோம்.

சர்வதேச நாணய நிதியம் ரணிலுடன் எந்த ஒப்பந்தங்களையும் செய்யவில்லை.

அதன் ஒப்பந்தங்கள் அனைத்தும் இலங்கை அரசுடனே மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனால், ஆட்சி மாற்றம் ஏற்பட்டால், சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கைகளுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது.

எனவே, தாம் இல்லை என்றால் நாடு மீண்டும் பாதாளத்துக்குச் சென்றுவிடும் என ரணில் கூறுவது முற்றிலும் பொய்யான கருத்தாகும்.”– என்றார்.















# தமிழ்ப் பொதுவேட்பாளரை ஆதரிப்பது இன நல்லிணக்கத்தைச் சீர்கெடுக்கும்!

## மொட்டின் பிரமுகர் கீதாநாத் காசிலிங்கம் கூறுகின்றார்

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த மத்திய குழு உறுப்பினர் கீதாநாத் காசிலிங்கம், வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்கள் பொது வேட்பளர் என ஒருவரை ஆதரிக்கும் யோசனை குறித்து தீவிர கவலை வெளியிட்டுள்ளார்.

இதனால் நாட்டில் நடைபெற்று வரும் நல்லிணக்க முயற்சிகளுக்கு வேண்டுமென்றே இடையூறு ஏற்படலாம் என அவர் எச்சரித்துள்ளார்.

ஜனாதிபதி பதவியின் கவனம் இனம் என்ற விடயத்தில் அல்ல, கொள்கைகள் மற்றும் தகுதிகளில் இருக்க வேண்டும் என்றும் காசிலிங்கம் வலியுறுத்தினார்.

இனப் பிளவுகளை வலியுறுத்துவது தமிழர் பிரச்சினையை பலவீனப்படுத்தி தேசிய நல்லிணக்கத்திற்கு பின்னடைவை ஏற்படுத்தும்



எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

”தமிழ் அரசியல்வாதிகள் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும், சாத்தியமான வீழ்ச்சிக்கு தென்னிலங்கையைக் குறை கூறக்கூடாது,” என்று அவர் கூறினார்.

தமிழ் அரசியல்வாதிகளின் பொறுப்பற்ற செயல்களால் ஏற்படப்போகும் விளைவுகளை எடுத்துக்காட்டிய அவர், ”சாதாரண மக்களே இதனால் பாதிக்கப்படுவார்கள்” என்று குறிப்பிட்டார்.

தீவிரவாதத்தைத் தூண்டும் ஆபத்துக்களுக்கு எதிராக எச்சரிக்கை விடுத்த அவர், அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் அமைதியான அணுகுமுறைக்கு அழைப்பு விடுத்தார்.

மேலும், வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல், வடக்கிற்கு முதலீடுகளை ஈர்த்தல், பிராந்தியத்தை வர்த்தக மையமாக மாற்றுவது, உள்ளூர் பொருளாதாரம் போன்றவற்றை வலியுறுத்திய அவர், சமூகங்களுக்கு நன்மை பயக்கும் வகையில் பிரிவினையை வளர்க்ககூடாது என்றார்.

தனிநாடு என்ற தீவிர சித்தாந்தத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து, அனைத்து சமூகங்களுக்கும் நவீன மற்றும் அமைதியான இலங்கையில் அனைத்து சமூகங்களும் வாழவேண்டும் என அவர் குறிப்பிட்டார்.



# ஆறுகளில் நீர்மட்டம் அதிகரிப்பு

நாட்டில் நிலவும் மழையுடனான கால நிலை காரணமாக கங்கைகளின் நீர்மட்டம் அதிகரித்து வருவதாக நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி நில்வளா கங்கையின் நீர் மட்டம் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கங்கையை அண்மித்த தாழ் நிலப்பகுதிகளில் வசிக்கும் மக்கள் வெள்ளம் குறித்து அவதானத்துடன் செயற்படுமாறு நீர்ப்பாசனத்திணைக்களம் அறிவுறுத்தல் விடுத்துள்ளது.



# கிளப் வசந்த கொலை தொடர்பாக அமல சில்வாவுக்கு விளக்கமறியல்!

கிளப் வசந்த எனப்படும் சுரேந்திர வசந்த பெரேரா உள்ளிட்ட இருவரின் கொலை தொடர்பில் கைதான மேல் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் அமல் சில்வா விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த 29 ஆம் திகதி கைது செய்யப்பட்ட அமல் சில்வா, தடுப்பு காவலில் வைத்து விசாரிக்கப்பட்டு வந்தார்.

இந்த நிலையில், நேற்று அவர் கடுவலை நீதவான் முன்னிலையில் பிரச்சன்னப்படுத்தப்பட்ட போது, அவரை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 2 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

கொலையாளிகளுக்குத் தங்குமிட வசதி மற்றும் ஆதரவை வழங்கிய குற்றச்சாட்டில், மேல் மாகாண தெற்கு குற்றப்பிரிவினரால் மேல் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் அமல் சில்வா கைது செய்யப்பட்டார்.

# தேசியத்தை பாதுகாக்க திலித் ஜயவீரவை ஜனாதிபதியாக்க வேண்டும் என்கிறார் விமல்

"சட்டத்தின் ஊடாக இலங்கையை பிறிதொரு பங்களாதேஷ் மற்றும் உக்ரைன் போன்று மாற்றியமைப்பதை தடுப்பதற்கு தேசியத்துக்காக திலித் ஜயவீரவை ஜனாதிபதியாக தெரிவு செய்ய வேண்டும். கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை விட்டு தப்பிச் சென்றதன் பின்னர் பிரச்சினைகள் நிறைவடைந்துவிட்டது என்று கருதுவது முற்றிலும் தவறானது."

– இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஜனாதிபதி வேட்பாளர் திலித் ஜயவீரவின் தேசிய மூலோபாய கருத்திட்டம் வெளியீட்டு நிகழ்வில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"உத்தேச உண்மை மற்றும் நல்லிணக்க சட்டமூலம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் 7 சட்டங்கள் கொண்டுவரப்பட்டன. யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்திய இராணுவத்தினரை குற்றவாளிக் கூண்டில் ஏற்றும் சட்டம் இலங்கையில்



தான் முதன்முறையாக இயற்றப்பட்டுளது. உலகில் எந்த நாடுகளிலும் இவ்வாறான சட்டங்கள் இயற்றப்படவில்லை.

தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்கவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் "இனம் மற்றும் மத அடிப்படைவாதங்களை முன்னிலைப்படுத்தி தோற்றம் பெறும் முரண்பாடுகளை விசாரணை செய்வதற்கு உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் செயற்பாடுகளை விரிவுப்படுத்தல்" என ஜனாதிபதி வேட்பாளர்களான ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸவுக்கு அப்பாற்பட்டு அனுரகுமாரதிஸாநாயக்கசென்றுள்ளார். இடதுசாரி லிபரல்வாதிகளின் நிலைப்பாடு இன்று இவ்வாறு மாற்றமடைந்துள்ளது.

சட்டத்தின் ஊடாக இலங்கையை பிறிதொரு பங்களாதேஷ் மற்றும் உக்ரேன் போன்று மாற்றியமைப்பதை தடுப்பதற்கு தேசியத்துக்காக திலித் ஜயவீரவை ஜனாதிபதியாக தெரிவுசெய்ய வேண்டும். கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை விட்டு தப்பிச் சென்றதன் பின்னர் பிரச்சினைகள் நிறைவடைந்துவிட்டது என்று கருதுவது முற்றிலும் தவறானது.

இலங்கையின் சுயாதீனம் மற்றும் இறையாண்மை இன்றும் அச்சுறுத்தல் நிலையில் காணப்படுகிறது. உலகுக்கு மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகம் பற்றி பாடம் கற்பிக்கும் அமெரிக்க ஆசியாவில் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் உள்ளக விவகாரங்களில் தலையிட்டு தமக்கு ஏற்றாற்போல் அரசாங்கத்தை தோற்றுவித்துள்ளது. பங்களாதேஷிலும் இலங்கையிலும் இவ்வாறான தன்மையே ஏற்பட்டது. ஆகவே நாட்டு மக்கள் தெளிவான தீர்மானத்தை எடுக்க வேண்டும்."– என்றார்.



# ரணிலின் சேவையை நினைவில் வைத்து நன்றியுணர்வுடன் தீர்மானம் எடுங்கள்!

## நிமல் லன்சா எம்.பி. கூறுகின்றார்

"வீழ்ந்த நாட்டை பொறுப்பேற்று இரண்டு ஆண்டுகளில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதனை மீட்டெடுத்தார். அதனை நினைவில் வைத்து நன்றியுடன் இருக்க வேண்டும். அத்தியாவசிய பொருள்கள் எதுவும் இன்றி இருந்த போது நமக்காக யார் முன்வந்தார்கள் என்பதை நினைவில் கொண்டு தேர்தலின்போது முடிவெடுங்கள்."

– இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லன்சா தெரிவித்தார்.

ஜா – எல பிரதேசத்தில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தின்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"வீழ்ந்த நாட்டை இரண்டாண்டுகளில் மீட்டவர் யார்? அதுதான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

நாடு வீழ்ந்தபோது அநுரவுக்கும் சஜித்துக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. அவர்கள் வந்தார்களா? ரணில் விக்கிரமசிங்கதான் முன்வந்தார். அதை மட்டும் நினைவில் கொள்ளுங்கள். நினைவில் வைத்து நன்றியுடன் இருங்கள். எரிபொருள், எரிவாயு, உரம், மருந்து என எதுவுமே இல்லாமல் இருந்த போது நமக்காக யார் முன்வந்தார்கள் என்பதை நினைவுகொள்ளுங்கள்.

நாடு மீண்டும் வீழ்ந்தால் மீண்டும் பழைய நிலைக்கு செல்வதை யாராலும் தடுக்க முடியாது. சஜித்தும் அநுரவும் நாட்டை காப்பாற்ற முன்வரவில்லை. இன்று சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர். எரிபொருள், எரிவாயு, மருந்து நிறையவே உள்ளன. இன்று பாடசாலைகள் திறக்கப்பட்டுள்ளன.

நாட்டை மீட்க அனுபவமும் திறமையும் இருக்க வேண்டும். அனுரகுமாரவுக்கு மற்றவர்களை விமர்சிக்க மட்டுமே முடியும்.

கோட்டாபய ராஜபக்ஷவும் மஹிந்த ராஜபகஹ்ச் குடும்பத்தினரும் இந்த நாட்டைத் தோல்வியடையச் செய்துவிட்டனர். இன்று இங்குள்ள அனைவரும் அவர்களை ஆட்சிக்கு கொண்டு வர உழைத்தனர். ஆனால் அவர்கள் நாட்டையும் மக்களையும் எங்களையும் தோல்வியடையச் செய்தார்கள். ரணில் விக்கிரமசிங்க தோல்வியடைந்த நாட்டை இரண்டு வருடங்களில் மீட்டெடுத்தார். ரணில் விக்கிரமசிங்க பொறுப்பேற்று நாட்டைக் காப்பாற்றினார்.

எனவே நன்றியுணர்வுடன் இருக்க வேண்டிய பொறுப்பு நம் அனைவருக்கும் உள்ளது. உங்கள் மனசாட்சிப்படி செயற்பட வேண்டும். இரண்டு வருடங்களுக்கு முன் நாட்டின் நிலைமையை நாம் அனைவரும் நினைவில் கொள்ள வேண்டும்."– என்றார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## இரகசியம் பரகசியம்...

அளவுக்கு செல்வாக்கு திரட்ட முடியாது என்பது நன்கு தெரியும்.

தமிழ்க் கூட்டமைப்பாய் நின்று சம்பந்தன் திரட்டிய வாக்குகளை, தனித்துத் தமிழரசில் நின்று தம்மால் திரட்டுவது துர்லபம் என்ற கணக்கு அவருக்கு நன்கு புரிகிறது. அதனால் அவர் கட்சிக்கே கணக்கு விட இப்போது தொடங்கிவிட்டார்.

தமிழ்க்கூட்டமைப்பு இன்று பிளந்துவிட்டது. தமிழரசு தனி வழி. எஞ்சிய கட்சிகள் ஒன்றிணைந்து ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டணியாக செயல்படுகின்றன. அவற்றுடன் ஒத்தூதும் நிலையில் விக்கியின் கட்சி.

தமிழரசைப் பொறுத்தவரை கட்சியின் மாவட்டக் கிளைச் செயலாளரான தம்மைப் புறமொதுக்கி அல்லது தாண்டி, கட்சியால் திருகோணமலையில் எதுவும் செய்ய முடியாது. விரல் கூட அசைக்க முடியாது என்று உறுதியாக நம்புகிறார் அவர்.

இந்தச் சூழலில் அடுத்த தேர்தலில் தனது வெற்றியை உறுதிப்படுத்துவதானால், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி, விக்கியின் கட்சி போன்றவற்றை அரவணைத்து, தமக்கு எதிராகப் போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று அவர் வியூகம் வகுக்கின்றார். அதற்காக தமிழரசுக் கட்சியின் போக்குக்குச் சற்று விலகி அல்லது முரண்பட்டு திருகோணமலையில் மற்றைய கட்சியுடன் தம்மளவில் திருகோணமலை மாவட்டத்தில் கூட்டு என்ற மாதிரி அவர் அரசியல் செய்கின்றார் எனத் தெரிகிறது.

சங்கு பக்கம் சாய்வதான அவரின் காய் நகர்த்தல்கள், மாவட்ட கிளை எடுக்காத முடிவை மாவட்ட கிளை எடுத்தது போல காட்டச் செய்வது, ரெலோ தலைவர் செல்வத்தைக் கூட்டி, தமிழரசு அலுவலகத்தில் கூட்டம் நடத்திவிட்டு, கட்சியின் தீர்மானத்திற்கு மாறாக மாவட்ட மட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டு இருப்பது போன்ற கூட்டு அறிவிப்பு ஒன்றை வெளியிட வழி செய்வது என அரசியல் செய்யத் தொடங்கி விட்டார்.

ஆனால் பல விடயங்களில் சம்பந்தன் எடுத்த நிலைப்பாட்டுக்கு தலைகீழ் மாற்றான நிலைபாடுகளை குகதாசன் எடுப்பது திருகோணமலையில் தமிழரசு கட்சிக்குள்ளேயே புகைச்சலை ஏற்படுத்தினாலும் ஏற்படுத்தி விடும்.

இன்று கட்சியின் மத்திய குழு வவுனியாவில் கூடுகின்றது. தனி வழி அரசியல் செய்யப் புறப்பட்டு இருக்கும் குகதாசனுக்கு கட்சிக்குள் பதிலடிகள் இன்று கிடைத்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. ஆனாலும் உப்பு போட்டு சாப்பிடாதவராக அத்தகைய விமர்சனங்களை 'ஒரு காதால்' வேண்டி, மறுகாதால் விட்டுவிட்டு தன்னுடைய அரசியல் சூதாட்டத்தை அவர் தொடர்வார் என்றே நினைக்கிறேன்.

தன்னுடைய அடுத்த தேர்தலில் வெற்றியை உறுதிப்படுத்துவதற்காக அவசரப்பட்டு கட்சி நிலைப்பாட்டை சர்ச்சைக்குள் கொண்டுபோய் மாட்டும் விதத்தில் அவசரப்பட்டு அவர் முன்னெடுக்கும் காய் நகர்த்தல் திருகோணமலையில் அவருக்கு அமைதியாக அரசியல் செய்ய இடம் அளிக்காத ஒரு நிலையை ஏற்படுத்தி விடுமோ என அஞ்ச வேண்டியுள்ளது.

## ரணிலை...

15 இலட்சத்துக்கும் அதிகமான அரச ஊழியர்கள் சரியான தீர்மானத்தை எடுப்பார்கள் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பிலேயே வஜிர அபேவர்தன இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

"இம்முறை ஜனாதிபதித் தேர்தல் மிக முக்கியமான தேர்தலாகும். நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து மீட்டெடுக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பல சட்ட சீர்திருத்தங்களை மேற்கொண்டார்.

பொருளாதார பரிமாற்றச் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. யார் கொள்கையை முன்வைத்தாலும், அது இந்த சட்டங்களின்படியே செய்யப்பட வேண்டும். சர்வதேச நாணய நிதியம் மற்றும் கடன் வழங்கும் நாடுகள் உள்ளிட்ட நிதி நிறுவனங்களுடன் ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளோம். இந்தச் சட்டங்களின்படி நாங்கள் செயற்படுவோம் என்பதை உறுதிப்படுத்துகிறோம்.

எனவே, வீழ்ந்து கிடந்த இந்த நாட்டை மீட்டெடுத்த ரணில் விக்கிரமசிங்கவின் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அந்த நிபந்தனைகள் திருத்தப்பட்டாலோ அல்லது மாற்றப்பட்டாலோ முழு நாடும் மீண்டும் வீழ்ச்சியடையும்.

எனவே, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் 15 இலட்சத்துக்கும் அதிகமான அரச ஊழியர்கள் தபால் மூல வாக்களிப்பைப் பயன்படுத்தும்போது சரியான முடிவை எடுக்க வேண்டும்.

சிலர் திருடர்களைப் பிடிக்க அதிகாரம் கேட்கின்றார்கள். ஆனால், இனிமேல் அவன் திருடன், இவன் திருடன் எனக் கூறிக்கொண்டிருக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆசியாவிலேயே மிகவும் சக்தி வாய்ந்த ஊழலுக்கு எதிரான சட்டம் நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி ரணிலால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இப்போது சம்பந்தப்பட்ட நிறுவனங்களில் முறையிட மட்டுமே வேண்டும். திருடர்களைப் பிடிப்பதாகக் கூறும் எதிர்க் கட்சித் தலைவர்களின் பெயர்கள் கூட அமைச்சுக்களின் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

வங்குரோத்து நிலையில் உள்ள நாட்டை மீட்பதற்காக உழைக்கும்போது ஜனாதிபதி ரணில் அரச ஊழியர்களை மறக்கவில்லை. அரச இயந்திரத்தின் முக்கியத்துவத்தை ஜனாதிபதி நன்கு உணர்ந்துள்ளார்.

அதனால்தான் கடந்த காலத்தில் அரச ஊழியர்களுக்கு 10 ஆயிரம் ரூபா வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவாக வழங்கப்பட்டது. மேலும், 2025 முதல் மாதாந்தம் 25 ஆயிரம் ரூபா வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அது மாத்திரமன்றி, அரச ஊழியரின் ஆரம்பச் சம்பளம் 24 வீதம் அதிகரிக்கப்படவுள்ளது. வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவுடன் மொத்தச் சம்பளமாக 55 ஆயிரம் ரூபா வழங்கும் இலக்கை அடைய இருப்பதாக ஜனாதிபதியின் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பல்வேறு தரப்பினரும் பல்வேறு முன்மொழிவுகளையும் வாக்குறுதிகளையும் உள்ளடக்கியிருந்தாலும், அந்த வாக்குறுதிகள் யதார்த்தமாக மாறுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

எனவே, அரச இயந்திரம் கவனமாகச் செயற்படாவிட்டால், இந்த நாடு மீண்டும் வீழ்ச்சியடையும். 2019 இல், அரசு ஊழியர்கள் அந்தத் தவறை செய்தார்கள். மீண்டும் அந்தத் தவறை அவர்கள் செய்யக் கூடாது.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களில் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க மாத்திரமே தேசிய கொள்கைக் கட்டமைப்புக்குள் கொள்கைப் பிரகடனத்தை முன்வைத்துள்ளார்.

எனவே, அரச ஊழியர்கள் சிந்தித்துச் செயற்பட வேண்டும். 38 வேட்பாளர்களில் சர்வதேச தொடர்புகளைக் கொண்ட, அனுபவம் உள்ள, நாட்டைப் பாதுகாக்கக் கூடிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இணையான தலைவர் யாரும் இல்லை.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் என்னைத் தோற்கடித்தாலும் பரவாயில்லை, இந்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவைத் தோற்கடிக்காதீர்கள். அவரைத் தோற்கடித்தால் முழு நாடும் அழிந்துவிடும். சிலிண்டருக்காக நீங்கள் அனைவரும் வாக்களிக்க வேண்டும்." – என்றார்.

## தமிழரசின்...

திருகோணமலையில் உள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் காரியாலயத்தில் நேற்று மாலை இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

மேற்படி கலந்துரையாடலில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் உட்படக் கட்சி பிரமுகர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

அங்கு மேலும் கருத்துரைத்த செல்வம் அடைக்கலநாதன் எம்.பி.,

"இந்தப் புரட்சிகரமான முடிவால் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஊடாக அனைவரும் ஒற்றுமையாகப் பயணிக்க வேண்டும். எங்கள் ஒற்றுமை தமிழ்க் கட்டமைப்பின் ஒற்றுமையைக் காட்டியுள்ளது.

சங்கு சின்னம் ஊடாக அனைத்து தமிழ்க் கட்சிகளும் மற்றும் சிவில் அமைப்புக்களும் ஒரே குடையின் கீழ் ஒன்றிணைந்து தமிழ் மக்களுக்குப் பலமான செய்தியைச் சொல்ல வேண்டும். எங்களுக்குள் பிரிவினையற்ற நிலை இல்லாது தமிழ்த் தேசியத்துக்கு அந்தப் பலத்தைக் கொண்டு செல்ல வேண்டும்.

பிரிவினைகள் மக்களுக்குக் கோபத்தை உண்டு பண்ணும். இதனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் தற்போது நாடாளுமன்றத்தில் இருக்கின்ற 10 பிரதிநிதித்துவம் எதிர்காலத்தில் ஐந்தாகக் குறையலாம்.

இந்தக் கூட்டு, தேர்தலுக்கான கூட்டாகவன்றி தமிழ் மக்களின் பிரச்சினைகளை வெளிக்கொணரவும் போராட்டங்களை முன்னெடுக்கவும் ஆழமராக இருக்க வேண்டும்.

திருகோணமலை மாவட்டத் தமிழரசுக் கட்சியின் முடிவால் கிளிநொச்சி மாவட்டத் தமிழரசுக் கட்சிக் கிளையும் இதே முடிவெடுத்துள்ளது." – என்றார்

இதன்போது உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன், "தமிழ்க் கட்சிகள் சிறு சிறு கட்சிகளாக இருக்காமல் அனைவரும் ஒன்றிணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகப் பயணித்து இழந்த உரிமைகளை மீளப் பெறுவோம் .1948 இல் இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்தது. ஆனால், தமிழ் மக்களுக்கு இன்னமும் சுதந்திரம் கிடைக்கவில்லை." – என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ரணிலால் மட்டுமே முடியுமா?

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தரப்பினரால் இந்த ஜனாதிபதித் தேர்தலில் கடைசி முயற்சியாக ஒரு வாதம் - பிரசாரம் - அவிழ்த்துவிடப்பட்டிருக்கின்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தத் தேர்தலில் தோற்றால் மீண்டும் நாட்டில் வரிசையுகம் வந்துவிடும் என்ற கருத்துத்தான் அது.

தோல்வியை தவிர்ப்பதற்காக ரணில் விக்கிரமசிங்க தரப்பு கடைசியாக அவிழ்த்துவிட்டிருக்கும் பிரசார ஆயுதம் இதுதான்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து நடத்தப்படும் பிரசார கூட்டங்களில் எல்லாம் பிரதான பேசுபொருளும் இதுதான்.

ரணில் விக்கிரமசிங்க மீண்டும் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படாவிட்டால், இலங்கையைப் பொருளாதார நெருக்கடியில் இருந்து பிணை எடுக்க வந்த சர்வதேச நாணய நிதியத்துடனான இலங்கையின் ஒப்பந்தங்கள் எல்லாம் குழம்பும், நாடு பெரும் பொருளாதார பின்னடைவு நிலையை மீண்டும் அடையும் என்றெல்லாம் எச்சரிக்கைகள் விடுக்கப்படுகின்றன.

அவை, கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் மக்களுக்கு ஏற்பட்ட நெருக்கடிகளை நினைவூட்டி, அச்சுறுத்தி, பெரும் பீதியை ஏற்படுத்தி, ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவைப் பெறும் கீழ்த்தரமான தந்திரோபாய முயற்சிகளின்றி வேறில்லை.

இதற்கு சாட்டையடியாகப் பதிலடி கொடுத்திருக்கின்றார் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளரும் தலைவருமான அநுரகுமார திஸநாயக்க.

"இந்த ஜனாதிபதித் தேர்தலினால் ஆட்சி மாற்றம் ஏற்பட்டாலும், சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கைக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது" - என அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கல்கிசையில் இடம்பெற்ற பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

"சர்வதேச நாணய நிதியம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் தனிப்பட எந்த ஒப்பந்தங்களையும் செய்யவில்லை.

''அதன் ஒப்பந்தங்கள் அனைத்தும் இலங்கை அரசுடனே மேற்கொள்ளப்பட்டுள்ளன.

"இதனால், ஆட்சி மாற்றம் ஏற்பட்டால், சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கைகளுக்கு எந்தவிதப் பாதிப்பும் ஏற்படாது.

''எனவே, தாம் இல்லை என்றால் நாடு மீண்டும் பாதாளத்துக்குச் சென்றுவிடும் என ரணில் கூறுவது முற்றிலும் பொய்யான கருத்தாகும்."- என்று அவர் கூறியிருக்கின்றார்.

ஏதோ இந்த நாட்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மட்டும்தான் பொருளாதாரத்தையும், சர்வதேசத்தைக் கையாளும் ராஜதந்திரமும், தகைமையும் இயலுமையும் உள்ளது என்பது போலவும், வேறு யாருக்கும் அது கிடையாது என்பது மாதிரியும் ஒரு பிம்பத்தை உருவாக்க அவரது தரப்பினரால் தீவிர முயற்சி எடுக்கப்படுவது அப்பட்டமானது.

ஆனால் சரியான - தேர்ந்த - பொருளாதார விற்பன்னர்களும் நிபுணர்களும் உண்மையில் சஜித் தரப்பிலும் அநுர தரப்பிலுமே உள்ளனர் என்பது கவனிக்கப்பட வேண்டும்.

நாடு பொருளாதார வங்குரோத்து நிலையிலிருந்து மீள்வதற்கு அவசியமானது பொருளாதாரக் கொள்கைகள் மாத்திரமல்ல. அவற்றையும் தாண்டி ஒரு விடயம் உண்டு. அது ஊழல், மோசடி, சுருட்டல், லஞ்சம், அதிகாரத் துஷ்பிரயோகம் போன்றவை இல்லாத நிர்வாகம்தான் அவசியம்.

நாட்டில் இந்தக் குளறுபடிகளில் எல்லாம் துறைதோய்ந்தவர்கள் ரணில் விக்கிரமசிங்க பக்கம்தான் உள்ளனர் என்பதையும் 21 ஆம் திகதி தேர்தலில் வாக்களிக்கப் போகும் வாக்காளர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

# நல்லூர் கந்தனுக்கு இன்று தேர்த்திருவிழா



வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ். நல்லூர் கந்தசுவாமி ஆலயப் பெருந் திருவிழாவில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்குத் தேர்த் திருவிழா நடைபெறவுள்ளது.

நல்லூர் கந்தசுவாமி ஆலயப் பெருந்திருவிழா கடந்த ஓகஸ்ட் 9ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. இதில், 24ஆம் திருவிழாவான இன்று தேர்த் திருவிழா நடைபெறவுள்ளது.

இன்றைய தேர்த் திருவிழாவில் வெளிநாடுகளிலிருந்தும் நாட்டின் பிற பாகங்களிலிருந்தும் ஏராளமானவர்கள் பங்கேற்பார்கள் என்று கருதப்படுகின்றது. இதையொட்டி சிறப்பு போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அத்துடன், குடிதண்ணீர், அன்னதானம் என்பன ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. பாதுகாப்பு, சுகாதார நடவடிக்கைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, 25 ஆம் திருவிழாவான நாளை திங்கட்கிழமை காலை 6.15 மணிக்குத் தீர்த்த உற்சவம் இடம்பெறும். மாலை 4.30 மணிக்குக் கொடியிறக்கத்துடன் பெருந்திருவிழா நிறைவு பெறும். நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு பூங்காவனத் திருவிழா நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

# வடக்கு - கிழக்கில் 90 வீத முஸ்லிம்கள் சஜித்துக்கே ஆதரவு



## இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகரிடம் முஸ்லிம் பிரதிநிதிகள் கூட்டாகத் தெரிவிப்பு

(அஸ்லம் எஸ்.மௌலானா)

இலங்கைக்கு விஜயம் செய்த இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் முஸ்லிம் கட்சிகளின் பிரதிநிதிகளையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இந்தச் சந்திப்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸைப் பிரதிநிதிப்படுத்தி அதன் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பாக அதன் தலைவர் ரிஷாத் பதியுத்தீன் மற்றும் அமீர் அலி ஆகியோரும் பங்குபற்றியிருந்தனர்.

இதன்போது தங்களுடைய இரு கட்சிகளும் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரிக்க முடிவு எடுத்த பின்னணியில் இலங்கையில் விசேடமாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சுமார் 90 வீதமான முஸ்லிம் மக்கள் நிச்சயமாக சஜித் பிரேமதாஸவுக்கு வாக்களிப்பார்கள் என்ற விடயத்தை எடுத்துரைத்துள்ளனர்.

இதுவரையான பிரச்சாரக் கூட்டங்கள் வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளன என்றும், இந்தக் கூட்டங்களில் மக்கள் நிறைந்து காணப்பட்டனர் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மேலும், எதிர்காலத்தில் புதிதாக உருவாக்கப்படும் சஜித் பிரேமதாஸவின் அரசில் தாங்கள் முக்கிய பொறுப்புகள் வகிப்போம் என்றும், ஆகவே புதிய அரசின் வெளிவிவகார கொள்கைகள் நிச்சயமாக இந்தியாவின் நேச சக்திக்கு முரணாக இருக்கமாட்டாது என்றும் அவர்களால் உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ளது.

ஆகவே, இந்தியாவின் தொடர்ச்சியான ஆதரவு இலங்கைக்குக் கிடைக்கும் என்று தாங்கள் எதிர்பார்ப்பதாகவும், பொருளாதார விடயங்கள் உட்பட முஸ்லிம்கள் உள்ளிட்ட சிறுபான்மையினரின் உரிமைகள் சம்பந்தமான விடயங்களிலும் இந்தியாவின் பங்களிப்பு இருக்கும் என்று தாங்கள் எதிர்பார்ப்பதாகவும் முஸ்லிம் கட்சிகளின் பிரதிநிதிகள் வலியுறுத்தியுள்ளனர்.

இவர்களால் சொல்லப்பட்ட விடயங்கள் சம்பந்தமாக இந்தியாவும் ஒரு சாதகமான நிலைப்பாட்டில் இருக்கின்றது என்று இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

# ரணில் தோற்றால் மீண்டும் வரிசை யுகம்! நிம்மதியான வாழ்வுக்கு அவரே வேண்டும்!!

## பரப்புரைக் கூட்டத்தில் இ.தொ.கா. எம்.பி. தெரிவிப்பு




"வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெற வேண்டியது காலத்தின் கட்டாய தேவையாகும். சிலவேளை ரணில் விக்கிரமசிங்க தோல்வியடைந்தால் முழு நாடும் தோல்வியடையும். மீண்டும் வரிசை யுகம் உருவாகும்."

– இவ்வாறு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரன் தெரிவித்தார்.

எனவே, மலையக மக்கள் உட்பட ஒட்டுமொத்த நாட்டு மக்களும், நாட்டின் நலன் கருதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை வெற்றிபெற வைக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து நேற்று நுவரெலியா – கொட்டகலை பகுதியில் இடம்பெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அமைச்சர் ஜீவன் தொண்டமானின் ஆலோசனைக்கமைய நாடாளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஷ்வரனின் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் கொட்டகலை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் ராஜமணி பிரசாத், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பிரதித் தலைவர் அனுஷா சிவராஜா உள்ளிட்ட கட்சியின் முக்கியஸ்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

அவர் மேலும் உரையாற்றுகையில், "எமது மக்களின் அமோக ஆதரவுடன் நானும், எமது பொதுச்செயலாளர் அமைச்சர் ஜீவன் தொண்டமானும் நாடாளுமன்றத்துக்குத் தெரிவானோம். அவ்வாறு தெரிவானதன் மூலம் நெருக்கடியான காலகட்டத்தில்கூட எமது மக்களுக்குச் சேவையாற்ற முடிந்தது.

எமது பொதுச்செயலாளர் அமைச்சரான பின்னர் குறுகிய காலப்பகுதிக்குள் மலையகத்துக்கும், முழு நாட்டுக்கும் பல சேவைகளை செய்யக்கூடியதாக இருந்தது. கொட்டகலை உட்பட பல பகுதிகளில் வீதிகள் புனரமைக்கப்பட்டன. உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டன. கடந்தகாலங்களில் முழுமைப்படுத்தப்படாதிருந்த வீட்டுத் திட்டங்கள் முழுமைப்படுத்தப்பட்டுன. புதிய வீடமைப்புத் திட்டங்கள் ஆரம்பமாகின.

நுவரெலியா மாவட்டத்தில் உள்ள அனைத்து பாடசாலைகளுக்கும் தேவையான உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகத் தெரிவான பின்னர் வரிசை யுகத்துக்கு முடிவு கட்டினார். பொருளாதாரத்தை மேம்படுத்தத் திட்டங்களை வகுத்தார். இன்று ரூபாவின் பெறுமதி வலுவடைந்து வருகின்றது. பொருட்களின் விலைகளும் குறைந்துள்ளன. சுற்றுலாப் பயணிகளின் வருகையும் அதிகரித்துள்ளது. எமது பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்குச் சம்பள உயர்வும் வழங்கப்பட்டுள்ளது .

எனவே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்நாட்டை ஆள வேண்டியது கட்டாய தேவையாகும். இன்னும் ஐந்தாண்டுகளுக்கு அவரின் தலைமைத்துவம் இருந்தால் இந்த நாடு நிச்சயம் முன்னேறும். சிலவேளை ரணில் விக்கிரமசிங்க தோற்றால் அது தனிமனிதனுக்குரிய தோல்வி அல்ல, நாட்டின் தோல்வியாகும். அதுமட்டுமல்ல மீண்டும் வரிசை யுகம் உருவாகும்.

இது தேர்தல் காலம் என்பதால் சில ஜனாதிபதி வேட்பாளர்கள் அதை வழங்குவேன், இதை வழங்குவேன் என உறுதிமொழி வழங்கலாம். ஆனால், எதுவும் நடக்கப்போவதில்லை . நடைமுறைக்குச் சாத்தியமான உறுதிமொழிகளை ஜனாதிபதி வழங்கியுள்ளார். எனவே, அவர் எமது மக்களுக்கு வழங்கியுள்ள வாக்குறுதிகளை நிச்சயம் நிறைவேற்றுவார்." – என்றார்.

# துப்பாக்கிச்சூட்டில் பெண் படுகாயம்!

பதுளை, பசறை பகுதியில் பெண்ணொருவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியொன்றினாலேயே சூடு நடத்தப்பட்டுள்ளது.

பசறை வீதி, ஹிந்தகொட பகுதியி நேற்று இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் படுகாயமடைந்த பெண் 32 வயதுடைய வெலிமடை பகுதியைச் சேர்ந்தவர் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

மேற்படி பெண் பதுளை பொது வைத்தியசாலையின் அதி தீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

துப்பாக்கிச்சூட்டை நடத்தியவர் மேற்படி பெண்ணின் கணவர் (வயது 35) என்றும் பொலிஸார் கூறினர்.

துப்பாக்கிச்சூட்டுக்கான காரணம் மேற்படி பெண்ணின் தகாத உறவே காரணம் என்றும் பொலிஸார் சந்தேகம் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பதுளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# இரண்டு தோழிகள் தவறான முடிவெடுத்து உயிர் மாய்ப்பு!

இரண்டு தோழிகள் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக்கொண்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் குருநாகல் – வெலிபென்னகஹமுல்ல பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

52 மற்றும் 49 வயதுடைய திருமணமாகாத இரண்டு தோழிகளே இவ்வாறு உயிரிழந்தனர் என்று வெலிபென்னகஹமுல்ல பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் இருவரும் 14 வருட காலமாகத் தோழிகளாக இருந்துள்ளனர் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் வெலிபென்னகஹமுல்ல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# பிரிவினைவாதிகளின் டொலருக்காகவே 13ஐ அமுல்படுத்துவதாக கூறுகின்றார்கள்

## உதய கம்மன்பில தெரிவிப்பு



“தேர்தல் செலவினங்களுக்காக பிரிவினைவாதிகளிடமிருந்து டொலர் பெற்றுக்கொள்வதற்காகவே ரணில், சஜித், அநுர ஆகியோர் வடக்குக்குச் சென்று 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதாக குறிப்பிடுகிறார்கள். வடக்கில் சாதிய ஒடுக்குமுறையால் இன்றும் ஒதுக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்படவில்லை. 1971ஆம் ஆண்டு இரத்து செய்யப்பட்ட சமூக குறைப்பாடுகளை தடுக்கும் சட்டத்தை மீண்டும் அமுல்படுத்துவோம்.”

- இவ்வாறு பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஜனாதிபதி வேட்பாளர் திலித் ஜயவீரவின் தேசிய மூலோபாய கருத்திட்டம் வெளியீட்டு நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“1957.04.13ஆம் திகதி தமிழ் - சிங்கள புத்தாண்டின் போது தெற்கு சிங்களவர்களை காட்டிலும் வடக்கு தமிழர்களே பெருமளவில் மகிழ்ச்சியடைந்தார்கள். வடக்கில் வாழ்ந்த தமிழர்களில் ஒரு தரப்பினருக்கு கோயிலுக்குள் சென்று கடவுளை வணங்குவதற்கு சிங்கள புத்தாண்டு தினத்தன்றே அனுமதி வழங்கப்பட்டது.

1957ஆம் ஆண்டு அப்போதைய சபாநாயகர் 1957ஆம் ஆண்டு 21ஆம் இலக்க “சமூக குறைப்பாடுகளை தடுக்கும்“ சட்டத்தை சான்றுரைத்தார். அன்று கையில் காசு இருந்தும் ஹோட்டலுக்கு சென்று தோசை, வடை சாப்பிட அனுமதி மறுக்கப்பட்டிருந்த, அடிவாங்க நேரிடும் என்ற அச்சத்தில் தமது சாதியினருக்காக ஒதுக்கப்பட்டிருந்த பேருந்துக்காக பல மணித்தியாலங்கள் காத்திருந்தவர்களுக்கும், பொது கிணற்றில் நீர் எடுப்பதற்கும் உரிமை மறுக்கப்பட்டிருந்த வடக்கு மக்களுக்கு 1957ஆம் ஆண்டே உண்மையான சுதந்திரம் கிடைக்கப்பட்டது.

பண்டாரநாயக்கவின் அரசாங்கத்தில் உருவாக்கப்பட்ட குழந்தை பண்டாரநாயக்கவின் அரசாங்கத்தில் பக்கவாத நோய்க்குள்ளாக்கப்படுகிறது. 1971ஆம் ஆண்டு ஸ்ரீமாவோ பண்டாநாயக்கவின் அரசாங்கம் இந்த சட்டத்துக்கு திருத்தம் ஒன்றை கொண்டு வந்து கீழ் சாதியினர்என்றுகருதப்படும்சமூகத்தினர்கோயிலுக்குள் சென்று கடவுளை வழங்குவதற்கு விதிக்கப்பட்டிந்த தடையை நீக்குவதற்கு உருவாக்கப்பட்ட சட்டம் நீக்கப்படுகிறது.

வடக்கு மக்கள் இந்த அநீதிக்கு எதிராக குரல் கொடுத்தார்கள். ஒருசிலர் தமது விதி என்று எண்ணி தங்களை தேற்றிக்கொண்டார்கள். தெற்கு சிங்களவர்களுக்கு இது தெரியவில்லை. 1971ஆம் ஆண்டு இழைக்கப்பட்ட அநீதி பற்றி எவரும் பேசவில்லை.

வடக்கு மக்களின் அடிப்படை பிரச்சினையை மூடி மறைக்கும் செயற்பாடுகள் மாத்திரமே முன்னெடுக்கப்படுகின்றன. ஜனாதிபதி வேட்பாளர்களான ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸ, அனுரகுமார திஸாநாயக்க ஆகியோர் வடக்குக்கு சென்று “சிங்களவர்களின் நெருக்கடியில் இருந்து விடுதலை பெற அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதாகக் குறிப்பிடுகிறார்கள்.

தேர்தல் செலவுகளுக்கு பிரிவினைவாதிகளிடமிருந்து டொலர் பெற்றுக்கொள்வதற்காக வடக்குக்கு சென்று இவர்கள் 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதாக குறிப்பிடுகிறார்கள். ஆனால் வடக்கில் இன்றும் சாதிய வேற்றுமையால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் குறித்து இவர்கள் கவனம் செலுத்தவில்லை. சாதிய வேற்றுமையால் வடக்கில் இன்றும் ஒதுக்கப்பட்டுள்ள மக்களின் நலனுக்காக சமூக குறைப்பாடுகளை தடுக்கும் சட்டத்தை மீண்டும் அமுல்படுத்துவோம்.

பிரிவினைவாதிகளை திருப்திப்படுத்துவற்காக உத்தேச உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை உருவாக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. எமக்கு நல்லிணக்கம் அவசியமா? யுத்தம் முடிவடைந்த பின்னர் நாட்டில் நல்லிணக்கம் உறுதிப்படுத்தப்பட்டது.

வடக்கில் உள்ளவர்கள் தெற்கில் வாழ்கிறார்கள், தெற்கில் உள்ளவர்கள் வடக்கில் வாழ்கிறார்கள். தமிழ் மற்றும் சிங்கள இனத்தவர்கள் திருமண பந்தத்தில் இணைந்துகொண்டுள்ளார்கள். இதனை காட்டிலும் நல்லிணக்கம் அவசியமா? உத்தேச உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஸ்தாபித்ததால் நாட்டில் மீண்டும் இரத்த வெள்ளம் ஓடும் நிலை ஏற்படும்.”- என்றார்.

# “இயலும் ஸ்ரீலங்கா” இளைஞர் மாநாட்டில் தேர்தல் சட்டமங்கள் மீறப்பட்டுள்ளனவாம்

## தேர்தல்கள் ஆணைக்குழுவே தெரிவிப்பு

ஜனாதிபதி வேட்பாளர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் மஹரகம தேசிய இளைஞர் சேவை மன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இயலும் ஸ்ரீலங்கா இளைஞர் மாநாட்டில் தேர்தல் சட்டம் மீறப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த மாநாட்டில் நாடளாவிய ரீதியில் உள்ள இளைஞர் கழகங்களைச் சேர்ந்த இளைஞர்கள் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

அவர்களுக்காகத் தயாரிக்கப்பட்ட மதிய உணவை வழங்குவதைத் தடுப்பதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்திருந்தனர்.

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் தலைவர், இந்த நிகழ்வில் தேர்தல் சட்டங்களை மீறும் வகையில் கருத்து வெளியிட்டுள்ளார் எனவும் கொழும்பு மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

அத்துடன், அரச சொத்தைப் பயன்படுத்தியும் தேர்தல் சட்டங்களை மீறியும் இளைஞர் சேவை மன்றத்தின் நடனக்குழுவும் மாநாட்டுக்குப் பயன்படுத்தப்பட்டதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக மஹரகம பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அந்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அத்துடன், தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் கொழும்பு மாவட்ட முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையமும் நடவடிக்கை எடுத்துள்ளது.



# நல்லூரில் இன்று தேர்!

ஈழத்தின் வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவ தேர்த்திருவிழா நாள் இன்றாகும். நாளை தீர்த்தத் திருவிழா இடம்பெற்று மாலை கொடியிறக்கத்துடன் திருவிழா நிறைவு காணவிருக்கிறது.

நாளை மறுதினம் திருக்கல்யாணமும், மறுநாள் வைரவர் உற்சவமும் நடைபெறவுள்ளன.

இந்தத் திருவிழாக்கள், படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் ஆகிய இறைவனின் ஐந்தொழில்களைக் குறிக்கின்றன.

தேர்த்திருவிழா அழித்தல் தொழிலைக் குறிப்பதாகக் கொள்ளப்படுகிறது.

இத்தகைய தேரில் எறிச் சென்றே தேவர்களைக் காப்பதற்காக இறைவன் அசுரர்களை அழித்தான் என்ற தொன்மக் கதை இங்கு குறிப்பிடத்தக்கது.

சித்திரத் தேர் ஒன்றின் சில்லிலிருந்து இறைவன் எழுந்தருளும் பீடம் வரையான பகுதி மூன்று பிரிவாகவோ ஐந்து பிரிவாகவோ வகுக்கப்பட்டு சிற்பங்கள் அமைக்கப்பட்டிருக்கும்.

இறைவன் காட்சிதரும் பகுதிக்கு மேலுள்ள சிகரம் ராஜ கோபுர விமானத்தின் மறுவடிவம் போல அழகுறக் காட்சி தரும்.

தேர் அசைந்து சென்று ஓரிடத்தில் நிலைத்தன்மை பெற்றுவிடுவது போல திருக் கோயில்களின் தேரோட்டம் சகல தோஷத்தையும் போக்கி, ஏற்ற இறக்கங்களை நீக்கி நிலையான வாழ்வை தந்துவிடும்.

தேரோட்டம் பார்ப்பவர்கள் அனைவரும் நிலையான வாழ்வை பெற்றுவிடுவர் என்பது ஐதீகம்.

1964 ஆம் ஆண்டு, அப்போதைய கோவில் அதிகாரியாக இருந்த சண்முகதாஸ் மாப்பாண முதலியார் ஆலயத்தில் இருந்த தேர் பழுதடைந்த நிலையில், புதிய தேர்த் திருப்பணியை நிறைவேற்றி, தானும் வடம் பிடித்து இழுத்து இரதோற்சவத்தை இன்னும் அழகாக்கினார்.

சித்திரத்தேர் திருப்பணி நிறைவேற்றி தானும் வடம்பிடித்துத் தேர் இழுத்தார் ; சண்முகதாச மாப்பான முதலியார். அந்தத் தேரே இப்போதும் தேர்த்திருவிழா தினத்தில் சண்முகப்பெருமான் ஆரோகணிக்கும் தேராகும்.

தேர்த்திருவிழா நாளில் ஆறுமுகப் பெருமான் கஜாவல்லி, மஹாவல்லி சமேத ஸ்ரீ சண்முகப் பெருமானாக எழுந்தருவது வழமை.

நல்லூர்த் தேர் என்பது யாழ்ப்பாணத்தவர்களுக்கு மட்டுமன்றி தமிழர்கள் வாழும் இடமெங்கும் எழுச்சி மிக்க நாளொன்றாகும்.

உள்ளூரில் இருந்து தேர்த்திருவிழாவை நேரடியாக காணக் கிடைத்தவர்கள் பெரும் பாக்கியம் பெற்றவர்கள்.

நேரடியாகத் தேர்த் திருவிழாவைக் காண முடியாதவர்களும் நேரடி ஒளிபரப்புகளின் வாயிலாக சண்முகப் பெருமானைக் கண்ணாரக் கண்டு களிப்பர்.

ஈழத்து ஆலயங்களில் 'அபிஷேகக் கந்தன்' எனப் போற்றப்படும் மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயம், 'அன்னதானக் கந்தன்' எனப் எனப் போற்றப்படும் செல்வச்சந்நிதி முருகன் ஆலயம் ஆகியவற்றின் வரிசையில் 'அலங்காரக் கந்தன்' எனப் போற்றப்படுவது நல்லூர் கந்தசுவாமி ஆலயம் ஆகும்.

பெயருக்கேற்றால் போல பெருமை மிகு அலங்காரமும், செழிப்பும் மிக்கவர் நல்லூரில் எழுந்தருளியிருக்கும் வேலவர்.

ஆலயத்தின் விசேட தினங்களாயினும், மஹோற்சவ தினங்களாயினும் முருகப் பெருமான் எழுந்தருளும் போது அருளொளி வீசும் அவரது கம்பீரமான தோற்றமும், எல்லையில்லாக் கொள்ளை அழகும் அதற்குச் சான்று.

விசேட திருவிழா நாள்கள் தவிர மஹோற்சவ காலங்களில் தினமும் வேல் பெருமான் வள்ளி, தெய்வானை சமேதரராக எழுந்தருளுவது வழமை.

சில விசேட தினங்களில் ஆலயத்தில் உள்ள மற்றொரு மூர்த்தியான முத்துக்குமாரரும், தேர்த் திருவிழா மற்றும் கந்தசஷ்டி சூரன் போர் நாள்களில் ஸ்ரீ சண்முகப்பெருமானும் எழுந்தருளுவது வழமையாகும்.

எழுந்தருளுவது எந்த மூர்த்தியாக இருந்தாலும், எந்தப் பக்கத்தில் இருந்து பார்த்தாலும் கண்களைக் கொள்ளை கொள்ளும் அழகும் அருளும் நிறைந்தது.

'பஞ்சம் படை வந்தாலும், பாரெல்லாம் வெந்தாலும் அச்சுவமோ நாங்களடி கிளியே, நல்லூர் கந்தன் தஞ்சமடி' என்று யோகர் சுவாமிகள் பாடியது போல நாட்டில் கொடிய யுத்தம் இடம்பெற்ற காலங்களில் கூட எவ்வித அச்சமுமின்றி நல்லூ ரானைத் தஞ்சமென்றடைந்த அடியவர்களுக்கு அருள்பாலித்தார் முருகன்.

நல்லூர்க் கந்தசுவாமி கோயில் தமிழுக்கும் சைவத்துக்கும் அருந் தொண்டுகள் ஆற்றிய யாழ்ப்பாணத்து அரசர்களது நேரடிப் பரிபாலனத்தில் இருந்து வந்த முக்கிய வணக்கஸ்தலங்களுள் ஒன்றாகக் கருதப்படுகிறது.

தொடர்ச்சி▼

# நல்லூரில் இன்று தேர்!

**தொடர்ச்சி▲**

அதன் வரலாறு பற்றிய பல்வேறு குறிப்புகள் நூல்களில் குறிப்பிடப்பட்டிருந்தாலும், அந்நியர் வருகையின் பின்னான சைவ சமய எழுச்சியின் முக்கியமானதொன்றாக நல்லூர் ஆலயத்தின் வியாபகம் குறிப்பிடப்படுகிறது.

இவ்வாயலயத்தின் வரலாறு பற்றி 'யாழ்ப்பாண வைபவமாலை' பல குறிப்புகளைக் கொண்டிருக்கிறது எனப்படுகிறது. இது தவிர 'நல்லைக் கலிவெண்பா', 'நல்லைக் வெண்பா', 'நல்லையந்தாதி', 'நல்லைக் குறவஞ்சி', 'நல்லை கந்தசுவாமி விஞ்சதி', 'நல்லை வேலவருலா' போன்ற நூல்களின் மூலம் நல்லைக்குமரனின் அருள் பரப்பப்படுகிறது.

நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்துக்கென்று சில சிறப்பம்சங்களும், தனித்துவமான தன்மைகளும் உண்டு.

நேரந்தவறாத ஆறு காலப் பூஜை, அடியவர்கள் அனைவரும் சமமாகப் பாவனை செய்யப்படும் வகையில் ஒரு ரூபா அர்ச்சனைச் சிட்டை என்பன நல்லூரானின் சிறப்பம்சங்கள்.

அதேபோலவே நல்லூர் ஆலயத்தில் தினமும் அதிகாலை வேளையில் இடம்பெறும் பள்ளியெழுச்சியும், மாலை வேளையில் இடம்பெறும் பள்ளியறைப் பூஜையும் நல்லூரின் தனித்துவமான மரபுகளில் ஒன்று.

ஒவ்வொரு நாளும் மாலையில் மூலஸ்தானத்தில் இருந்து முருகப் பெருமானை சிறிய மஞ்சம் ஒன்றில் எழுந்தருளச் செய்து அவரைப் பாடிப் பரவிய படி அழைத்துச் சென்று பள்ளியறையில் அமரச் செய்து திரு ஊஞ்சல் பாடித் துயிலுற வைப்பர்.

காலையில் பள்ளியறை வாயிலில் நின்று திரு நல்லூருத் திருப்பள்ளியெழுச்சி பாடுவர்.

பின்பு முருகப்பெருமானை சிறு மஞ்சத்தில் ஏற்றி அழைத்து வந்து மூலஸ்தானத்தில் எழுந்தருளச் செய்து அன்றைய நாளின் அபிஷேக ஆராதனைகளை ஆரம்பிப்பதும் தனித்துவமான மரபு.

எல்லாவற்றுக்கும் மேலாக நல்லூரில் அமர்ந்து அருளாட்சி புரிகின்ற ஸ்ரீ சண்முகப் பெருமான், பழனி சந்நிதானத்தில் இருக்கின்ற தண்டாயுதபாணி, வள்ளி, தேவசேனா சமேத முத்துக்குமாரசாமி, மூலவராக அமர்ந்து அருளுகின்ற வேலவர், காவல் கடவுளான வைரவப்பெருமான் மற்றும் நல்லூர்த் தேரடி என்பன மாண்பும் மகிமையும் மிக்க அம்சங்களாகும்.

**எஸ். சதானந்தசிவம்.**

# நல்லூரரான் தேர் பார்ப்போம் எல்லோரும் வாருங்கள்...!

வேதமொடு திருமுறை மேலான வாத்தியங்கள்
காலையிலே ஒலிக்கக் கந்தனுமே புறப்பட்டு
ஆதவனும் அங்கே அழகாக ஒளி கொடுக்க
சோதியெனக் கந்தனுமே தேரேற வந்திடுவான்

முருகா எனும் நாமம் மூவுலகும் கேட்டுவிடும்
அடியார்கள் தமைமறந்து முருகனையே நோக்கிடுவார்
தமிழான முருகனுமே தவழ்ந்துவரும் வெண்ணிலவாய்
அழகாக அசைந்தபடி அடியார்கள் தோள்வருவான்

வாசுகிப் பாம்பாக தேர்வடமோ நீண்டிருக்கும்
வடம்பிடிக்க அடியார்கள் வாஞ்சையுடன் வந்திடுவர்
வடந்தொட்டால் வழிபிறக்கும் எனவடியார் நம்பிடுவர்
வண்ணமயில் வாகனனின் தேருமே அசைந்துவரும்

ஊரெல்லாம் நல்லூரான் உவந்துவரும் தேர்காண
வெண்மணலில் விதைத்துவிட்ட நன்மணியாய்
நிறைந்திருப்பர்
தேர்வடத்தைத் தொட்டுவிட்டால் செய்தவினை
அகலுமென
தொட்டுவிட அடியார்கள் கிட்டக்கிட்டச் சென்றிடுவர்

தேரடியில் மலையாக தேங்காய்கள் குவிந்திருக்க
கூடிநிற்கும் அடியார்கள் குறையகற்ற உடைத்திடுவர்
சிதறிவிடும் தேங்காய்போல சிக்கலெலாம் ஆகவென
சிந்தையிலே அடியார்கள் செறிவாக நிறைத்திடுவர்

ஆடம்பரம் இல்லாத ஆலயமாம் நல்லூர்
அமைதியொடு ஆன்மீகம் ஆலயத்தின் சொத்து
வேண்டாத சிக்கல்களை உள்வாங்காக் கோவில்
வேலவனின் அருளொழுகும் நல்லூரின் கோவில்

ஏழை பணக்காரரெலாம் இணைந்தங்கே நிற்பர்
எல்லோரும் நல்லூரான் அடியாராய் வருவர்
தேரோடும் வீதியெலாம் திரளாக நிற்பர்
தேரேறி வருமழகன் திருமுகத்தைக் காண



மங்கையர்கள் மடவார்கள் வாலிபர்கள் வயோதிபர்கள்
வண்ண மலராக சின்னவர்கள் நிறைந்திடுவர்
எங்குமே பார்த்தாலும் அடியார்கள் பெருவெள்ளம்
அவ்வெள்ள நடுவினிலே அழகுத்தேர் மெள்ளவரும்

எந்நாட்டில் இருந்தாலும் எல்லோரும் வந்திடுவர்
நல்லூரான் தேர்பார்த்து தொல்லையெலாம் போக்குதற்கு
ஊரிருப்பார் சேர்ந்திடுவர் உமைமைந்தன் தேர்காண
தேரமர்ந்து வேலவனும் யாவையுமே அருளிடுவான்

நல்லூரான் தேர்பார்த்தால் நம்துன்பம் அகன்றுவிடும்
நல்லூரான் வடந்தொட்டால் நன்மைபல பெருகிவிடும்
நல்லூரான் தேர்பார்த்தால் நமையெதுவும் அணுகாது
நல்லூரான் தேர்பார்ப்போம் எல்லோரும் வாருங்கள்...!

*மகாதேவஐயர் ஜெயராமசர்மா,*
*இயக்குநர்,*
*மேனாள் தமிழ்மொழிக் கல்வி,*
*மெல்பேர்ண்,*
*ஆஸ்திரேலியா.*



# நடக்கும் ஜனாதிபதி தேர்தலும் தமிழ் மக்களின் எதிர்காலமும்...?



வி.எஸ்.சிவகரன்

சர்வதிகார ஆட்சி முறைமையை இந்த நாட்டிலே அறிமுகப்படுத்தி அதிகார வர்க்கத்தின் ஆதிக்கத்திற்கு ஏற்ற வகையிலே பௌத்த, சிங்களவர்களை கட்டமைத்தவர் ஜே.ஆர்.ஜெயவர்த்தன. அவரின் நாசகார சிந்தனையின் வடிவமாகவே இன்றைய அரசமைப்பும் பிரதிபலிக்கின்றது.

அவரைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த பிரேமதாஸ்வும் முன்னுக்குப்பின் முரணாகவே தமிழர் விவகாரங்களைஸ் கையாண்டு வந்தார்.

இவர்கள் ஒவ்வொருவரும் அடிப்படையில் இலங்கையர்கள் என்பதை விட கடும் கோட்பாட்டு பௌத்த தேசியவாதத்தின் காவலர்களாகவே தங்களை அடையாளப்படுத்திக் கொண்டனர். தனிச் சிங்கள சட்டத்தை நடைமுறைப்படுத்திய எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்கா இந்த நாட்டின் பிரிவினைவாத இனவாதத்திற்கு அச்சாணியாகினார். அதுவே வளர்ச்சி அடைந்து பெருவிருட்சமாகியது. இனவாதத்தில் சிறிமாவோ பண்டாரநாயக்காவும் சளைத்தவர் அல்லர் என்பதனை நிரூபித்தார். கல்வித் தரப்படுத்தலால் தமிழ் மாணவர்களின் வாழ்வை சீர்குலைத்தார்.

இலங்கை சுதந்திரத்துக்கு பின்னர் தொடர்ச்சியாகவே ஆட்சிக்கு வந்த அத்தனை தலைவர்களும் தமிழர்களை இலங்கையர்களாக நோக்கவில்லை. அதன் விளைவாகவே இன முரண்பாடும் தோற்றம் பெற்றது. அதனால்தான் பல்வேறு விதமான இனக் கலவரங்களும் ஏற்படுத்தப்பட்டன. இந்த புறக் கணிப்புகளினால் விரக்தியின் விளிம்பில் நின்ற தமிழ் மக்கள் வேறு வழி இன்றி ஆயுதம் ஏந்த வேண்டிய நிர்ப்பந்தத்தை இலங்கை அரசு ஏற்படுத்தியது என்பதே கடந்த கால வரலாறு.

கடந்த நான்கு தசாப்தத்திற்கு மேலாக எட்டு ஜனாதிபதி தேர்தல்கள் நடந்துள்ளன. பிரதான கட்சிகளினுடைய வேட்பாளர்கள் தமிழ் மக்களின் வாக்குக்களை இலாபகரமாக பெறுவதற்காக பல போலி வாக்குறுதிகளையும் செயல்படுத்த முடியாத உத்தரவாதங்களையும் வழங்கி காலத்துக்கு காலம் ஏமாற்றியதே வரலாறு. சம கால உலகில் அதி உச்ச அதிகாரம் உள்ள பதவியே இலங்கை ஜனாதிபதி நிலை. அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி தமிழ் மக்களை இனப்படுகொலை செய்திருக்கிறார்களே தவிர முன்னோக்கி நகரவில்லை.

தேர்தலில் எழுத்து மூலமான ஒப்பந்தங்கள் செய்தும் வெற்றி பெற்ற பின்னர் நடைமுறை சாத்தியமற்றதாக்கப்பட்டன என்பதுதான் கடந்த கால வரலாறு. தேர்தலிலே வெற்றி பெறுவதற்காக பல்வேறு விதமான தந்திர யுக்திகளை பயன்படுத்தி தமிழர் தரப்பை இணங்க வைத்து, வாக்குப் பெற்று அதிகாரத்தை தமிழர்கள் மீது உபயோகித்ததை தவிர எந்த வரலாறும் இதுவரை பதிவு செய்யப்படவில்லை.

தான் ஒரு விதவை தனக்கு வடக்கு, கிழக்கு பெண்களின் உடைய நிலைமை நன்கு புரியும் என நீலிக்கண்ணீர் வடித்த சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தேர்தல் மேடைகளிலே அனுதாப பேச்சுக்கள் மூலம் வடக்கு கிழக்கு வாக்குகளையும் தனதாக்கிக் கொண்டார். பின்னர் நடந்தவை என்ன? பல லட்சக்கணக்கான மக்களை இடப்பெயர்வுக்கு உள்ளாக்கி, பொருளாதாரத் தடைகளை விதித்து, தொடர் யுத்தத்தை நடத்தி, ஆயிரக்கணக்கானவர்களைக் கொலை செய்வதற்கு காரணமாக இருந்தவர். அதிலும் தனது கணவர் விஜய குமாரதுங்க இறுதியாக நடித்த வெற்றிப் படமாகிய 'ஜெயசிக்குறு' எனும் பெயரைச் சூட்டி அதிக காலம் யுத்தத்தை நடத்திய அவலப்பெருமையும் இவரையே சாரும்.

சமாதான புராணம்பாடி, போலி முகத்தைக் காட்டி, தமிழ்ப் பெண்களை அதிகம் காணாமல் போகச் செய்தும் விதவைகளாகவும் ஆக்கினார். தற்போது புனித நீராடி பாவ விமோசனம் பெற்றவர் போல் வேஷம் போடுகிறார்.

சகல விதமான தந்திரங்களையும் பயன்படுத்தி தனது மதியூகித்தனத்தால் இலங்கையில் உள்ள கட்சிகளை மட்டுமின்றி விடுதலைப் புலிகளையும் பிளவுபடுத்தி தனது நரி தந்தரத்தனத்தை செயல்படுத்தி தமிழரை நலிவுறுத்தினார் ரணில் விக்கிரமசிங்க. அவரின் அவதந்நரங்களினால் தமிழ்த் தேசியம் சிதைவடைந்து நலிவுற்றுப் போனது. அவருக்கு ஐந்து ஆண்டுகள் தொடர்ச்சியாக ஆட்சி செய்யக் கூடிய அதிர்ஷ்டம் கிட்டவில்லை. இனப் பிரச்சினைக்குத் தீர்வாக சமஷ்டி வழங்க இணங்கினர். அதிகாரத்துக்கு வந்த பின்னர் எவ்விதமான அதிகார பகிர்வுக்கும் அவர் தயாராக இருக்கவில்லை. காலத்தை கடத்துவதிலும் அரசியல்வாதிகளை பிரிப்பதிலும் தன்வசப்படுத்துவதிலுமே தனது ஆட்சிக் காலத்தை அர்த்தமற்று நகர்த்துபவர்.

தமிழர் தரப்பு அரசியல் கணக்கை சரியாக போடத் தவறியதன் விளைவு ராஜபக்ஷக்களால் தமிழினம் இன அழிப்புக்கு உள்ளாகியது. இனவாதத்தை மூலதனமாகக் கொண்டு சிங்கள - பௌத்த தேசியவாதத்தை அடிப்படையாக வைத்து, தமிழினத்தை சிதைத்து, தற்போதும் யுத்த வெற்றி வாதகதாநாயகர்களாகவே அவர்கள் நோக்கப்படுகிறார்கள். பொருளாதார ரீதியாக இந்த நாட்டை சீர்குலைத்தவர்கள் எனும் கோபம் இருக்கிறதே தவிர, யுத்த வெற்றி வாதத்தின் மீது சிங்கள - பௌத்த தேசிய வாதத்தின் கரிசனை ஆதரவு எப்பொழுதும் ராஜ

தொடர்ச்சி▼



# நடக்கும் ஜனாதிபதி தேர்தலும் தமிழ் மக்களின் எதிர்காலமும்...?

தொடர்ச்சி▲

பக்ஷக்கள் மீது உண்டு. தற்போதைய தேர்த லிலும் கூட நாமல் ராஜபக்ஷ இனவாதத்தையே வாக்கு வேட்டைக்காக விதைத்து வருகிறார். 13 பிளஸ் எனக் கூறி, அதற்கும் அப்பால் சென்று இந்திய முறைமை பற்றி பேசலாம் எனக் குறிப்பிட்ட் ராஜ பக்ஷக்கள் இப்பொழுது தமிழர் தரப்பு நிராகரித்த 13 ஆபத்து என்ன கூறுகிறார்கள்.

தமிழர் தரப்பின் முழு ஆதரவோடு அதிகாரத்துக்கு வந்த மைத்திரிபால சிறிசேனவை இலங்கையின் நெல்சன் மண்டேலா என விளித்தார் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவராக இருந்த இரா.சம்பந்தன் அவர்கள். அவர் ஆட்சிக்கால முடிவில் தாம் ஒரு கோமாளி என்பதனை நிரூபித்து விட்டு போய்விட்டார். ஆட்சிக்கு தொடர்ந்து ஆதரவாக இருந்த தமிழர் தரப்பால் கூட கம்பிரலியவை தவிர வேறு எதனை யும் பெற்றுக் கொள்ள முடியவில்லை.

முழுமையான பௌத்த தேசியவாத வாக்கில், எந்தவிதமான அரசியல் முன் அனுபவமும் இன்றி ஆட்சிக்கு வந்த கோட்டபாய ராஜபக்ஷ் இனவாதத் தையும் சந்தர்ப்பவாதத்தையும் தனதாக்கியதுடன் பொருளாதாரத்தை தொடர்ந்து சீரழித்ததன் விளை வாக ஐந்து ஆண்டுகள் கூட அவரால் ஆட்சி புரிய முடியாமல், ஏகோபித்த ஆதரவோடு வந்தவர் அதே சிங்கள மக்களால் விரட்டப்படக் கூடிய நிர்பந்தத் துக்குள் தள்ளப்பட்டார். இந்த விடயம் அரசியல் கட்சிகளுக்கு நல்ல அனுபவமாகியது.

தற்போதைய ஜனாதிபதி தேர்தலில், கடந்த எட்டு ஜனாதிபதி தேர்தல்களையும் விஞ்சும் வகை யிலே சமநிலைப் போட்டியாளர்கள் மூவர் காணப் படுகின்றனர். அதனால் யாரேனும் ஒருவருக்கு வாக்குகள் 50 வீதத்தை தாண்டக்கூடிய நிலைமை ஏற்படுமா எனும் வாதம் எழுந்துள்ளது. அவ்வாறா யின் விருப்பு வாக்குகளை எண்ண வேண்டிய நிலைமையும் ஏற்படலாம்.

இந்த மூன்று பிரதான வேட்பாளர்களும் தமிழ் மக்களின் நீண்ட கால இனப்பிரச்சனை தீர்வு விட யம் தொடர்பில் எவ்விதமான ஆக்கபூர்வமான வெளிப்படுத்தல்களையும் தேர்தல் விஞ்ஞாபனத்தில் முன்வைக்கவில்லை. ஒருவேளை வெளிப்படையாக தேர்தல் விஞ்ஞாபனத்தில் இனப்பிரச்சினை தீர்வு தொடர்பான முன்மொழிவுகளை வெளியிட்டால் சிங்கள மக்கள் மத்தியிலே வாக்கு பெறக்கூடிய நிலைமை இல்லாமல் போய்விடுமோ எனும் அச்ச மும் கூட இருக்கலாம். ஆனாலும் அவ்விதமாக தந்திரோபாயமாக இவர்கள் தவிர்த்தது போல் தெரியவில்லை. ஏனெனில் ஒருவர் 13ஐ நடை முறைப்படுத்துவேன் என்று சொல்கிறார். இன்னொ ருவர் முழுமையான பதின்மூன்று என்று சொல்கிறார். மற்றவர் அதிலும் தெளிவான நிலை இல்லை. அதிகாரப் பகிர்வு தொடர்பில் அவர்களிடத்தில் எந்தவிதமான தூரநோக்குப் பார்வையும் தெளிவும் இருப்பதாக தெரியவில்லை.

கடந்த காலங்களை விட தற்போது நடைபெற வுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் அதிகாரப்பகிர்வு தொடர்பில் பிரதான வேட்பாளர்கள் பெரிதும் அலட்டிக் கொள்ளவில்லை. ஏனெனில் அவர்கள் வடக்கை ஒருவிதமாகவும் கிழக்கை இன்னொரு விதமாகவும் கையாளுகின்றார்கள் என்றே தெரிகிறது.

1987லேயே தமிழர் தரப்பால் நிராகரிக்கப்பட்ட 13 ஆவது திருத்தத்தை தீர்வு முயற்சி என முன் வைப்பது 70 ஆண்டுகளாக உள்ள இன முரண்பாட்டை ஒருபோதும் தீர்த்து விடாது. முள்ளிவாய்க்கால் இன அழிப்புக்கு பின்னும் 13 ஐ தீர்வாக ஏற்றுக் கொள்ளக்கூடிய நிலைமை தகுமா எனும் வாதமும் தமிழர் தரப்பில் உண்டு.

வடக்கு - கிழக்கைப் பிரித்து, சிங்கள மக்கள் மத்தியிலே இனவாதத்தை தூண்டிய ஜே.வி.பியால் இதயசுத்தியான அதிகாரப் பகிர்வை முன் வைக்க முடியுமா? பிரேமதாஸவைக் கொலை செய்துவிட்டு மகனிடம் தீர்வை எதிர்பார்க்க முடியுமா? ராஜீவ் காந்தி படுகொலைக்கு பின்னர் சோனியா காந்தி இடம் தீர்வை எதிர்பார்த்தது போல் ஆகி விடாதா? அதற்குப் பழி தீர்ப்பதற்காகவே முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையை முன் நின்று நடத்தியது காங்கிரஸ் அரசு.

அடுத்தவர் தற்போதைய ஜனாதிபதி. இவருக்கு கடந்த காலத்தில் கிடைத்த பல சந்தர்ப்பங்களில் கூட எதையுமே இதய சுத்தியோடு செயல்படுத்த வில்லை. காலத்தை கடத்துவதிலும் குழப்பத்தை ஏற்படுத்திடுவதிலும் இவருக்கு நிகர் இவரே.

ஆகவே எவர் வெற்றி பெற்றாலும் தமிழர்களின் இனப்பிரச்சனை தீர்வு விடயம் என்பது ஒரு பேசு பொருளாக இருக்கக்கூடிய களச் சூழல் இருப்பதாகத் தெரியவில்லை. அதற்கு காரணம் வடக்கு, கிழக்கை பௌத்த தேசியவாதபிடிக்குள் கொண்டு வந்ததும், திட்டமிட்ட சிங்கள குடியேற்றமும், கிழக்கில் முஸ்லிம்களின் குடித்தொகை அதிகரிப்பும், சிங்கள வர்களின் குடியேற்றமும், பல அரச திணைக்களங் களின் ஊடாக நிலம் கையகப்படுத்தலும், தமிழர் தாயகத்தில் தமிழர்களை சிறுபான்மை இனமாக்கும் நீண்டகால செயல் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருவதுமாகும். இன்னும் சில ஆண்டுகள் இதே

தொடர்ச்சி▼

# நடக்கும் ஜனாதிபதி தேர்தலும் தமிழ் மக்களின் எதிர்காலமும்...?

**தொடர்ச்சி▲**

நிலைமை தொடர்ந்தால் பெரும்பான்மையை வடக்கு கிழக்கில் தமிழர்கள் இழந்து விடக் கூடிய நிலையை ஏற்படுத்தி விடலாம் என கொழும்பு எப்பொழுதும் கனவு காண்கிறது.

அதன் ஒரு வடிவமே தற்போது அதிகாரப்பகிர்வு விடயத்தில் இவர்கள் அதிகம் அலட்டிக் கொள்ளவில்லை என்பதாகும். தமிழர் தரப்பிலும் கட்சிகள் பிளவு பட்டு இருப்பதனால் கூட்டு முடிவாக ஒரு விடயத்தையும் முன்னெடுக்க மாட்டார்கள் என சிங்களக் கட்சிகள் நம்புகின்றன. தமிழ் மக்களின் எதிர்காலம் என்பது இலங்கைத்தீவில் இரண்டாம் தர பிரஜையாகவே வாழ்ந்து விட்டுப் போக வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்துகிறது.

ஏனெனில் இனஅழிப்புக்கு நீதி வழங்காத உலகம் - கூட்டுச் சேர்ந்து முள்ளிவாய்க்கால் படுகொலையை செயல்படுத்திய சர்வதேச சமூகம் - குறிப்பாக இந்திய அரசு - இவர்களிடத்தில் நீதி கிடைக்கும் என இனியும் நம்புவது எம்மை நாமே ஏமாற்றுவதாகவே அமையும். அரசற்ற தரப்புகளோடு இராஜதந்திரத் தரப்புகள் எப்பொழுதும் வலிமையான உறவு வைத்திருக்கக் கூடிய யதார்த்தம் இருந்ததில்லை. தமது அயலுறவு நலனுக்கு ஏற்ற வகையிலே பாதிக்கப்பட்ட தரப்புகளை அணுகுவதும் பிரித்தாளும் வேலையிலுமே ராஜதந்திரத் தரப்புகள் ஈடுபடுகின்றன.

இதற்குள் ஒருமித்த கருத்து இன்றி தமிழ் பொது வேட்பாளர் கோசமும் முன் வைக்கப்படுகிறது. இந்த நாட்டிலே வாழ்வியல் அடிப்படை உரிமையற்ற இனம் தன் இருப்பை தக்க வைப்பதற்கு இனி என்ன வழியை தேட வேண்டும் எனப் புரியாது, திக்குத் திசை தெரியாத காட்டில் கண்ணைக் கட்டி விட்டது போல் தடுமாறுகின்றன தமிழ்க்கட்சிகள். சுயநலத்தின் உச்சத்தை தொட்டு விட்டன அவை. நேர்மையோடு வழிநடத்துவதற்கு தலைவர்கள் எவரும் இல்லை. இருப்பவர்களும் இன விடுதலை அரசியலை தூய நோக்கோடு கபடம் இன்றி முன்னெடுக்கக் கூடியவர்களாக இல்லை. ஆகவே தமிழ் மக்களின் எதிர்காலம் இலங்கை தீவில் கேள்விக்குறியாகவே இருக்கப் போகிறது.

# வாக்காளர் அட்டை விநியோகம் செவ்வாய்க்கிழமை தொடங்கும்

## தபால் திணைக்களம் தகவல்

உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை விநியோக நடவடிக்கைகள் எதிர்வரும் 3 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனை முன்னிட்டு சுமார் 8,000 பேரை பணியில் அமர்த்த எதிர்பார்ப்பதாக சிரேஷ்ட பிரதி தபால் மாஅதிபர் ராஜித ரணசிங்க கூறினார்.

எதிர்வரும் 02 ஆம் திகதி காலையிலிருந்து தபால் ஊழியர்கள் அந்தந்த மாவட்ட தேர்தல் அலுவலகங்களுக்கு சென்று வாக்காளர் அட்டைகள் அடங்கிய பொதிகளை உரிய முகவரிகளுக்குக் கொண்டு செல்லும் நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளனர் என அவர் குறிப்பிட்டார்.

இந்தப் பணிகளுக்கு தபால் திணைக்களத்திற்கு உரித்தான வாகனங்களும் தேர்தல் ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட வாகனங்களும் பயன்படுத்தப்படவுள்ளன.

விசேட பாதுகாப்புடன் வாக்காளர் அட்டைகள் கொண்டு செல்லப்படவுள்ளன.

எதிர்வரும் 03 ஆம் திகதியிலிருந்து உரிய தபால் அலுவலகங்கள் ஊடாக வீடுகளுக்கு விநியோகிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என சிரேஷ்ட பிரதி தபால் மாஅதிபர் ராஜித ரணசிங்க மேலும் தெரிவித்தார்.

# நேற்று நள்ளிரவு தொடக்கம் எரிபொருள் விலை குறைப்பு

நேற்று நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எரிபொருள்களின் விலையைக் குறைத்துள்ளது.

இதன்படி, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், ஒக்டேன் 92 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலையை 12 ரூபாவினால் குறைத்து 332 ரூபாவாக நிர்ணயித்துள்ளது.

அத்துடன், ஒக்டேன் 95 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலையை 2 ரூபாவினால் குறைத்து 377 ரூபாவாக நிர்ணயித்துள்ளது.

அத்துடன் ஒட்டோ டீசல் லீற்றர் ஒன்றின் விலை 10 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய ஒட்டோ டீசல் லீற்றர் ஒன்றின் புதிய விலை 307 ரூபாவாகும்.

அத்துடன், சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் விலை 3 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, அதன் புதிய விலை 352 ரூபாவாகும்.



இதேவேளை, மண்ணெண்ணெய் விலையில் மாற்றம் இல்லை எனவும் 202 ரூபா என்ற விலையிலேயே அதன் விலை மாற்றமின்றி தொடரும் எனவும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

# பொது வேட்பாளரைக் களம் இறக்கியமை ஒரு வகையில் இராஜதந்திரப் போராட்டம்

## நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் அறிக்கை

பொது வேட்பாளர் என்பது வெறுமனே ஓர் எதிர்ப்பு நடவடிக்கை மட்டும் அல்ல. மாறாக இது ஓர் இராஜதந்திர போராட்டமும் கூட. அத்துடன் இது ஓர் அரசியல் செயற்பாடும் ஆகும். தமிழ் மக்கள் தமது தாயகத்தில் ஒன்றுதிரண்டு சிங்கள அரசுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் வெளிப்படுத்தும் எமது அபிலாஷைகளுக்கான குரல், உரிமைகளுக்கான குரல் மற்றும் அடக்கு முறைகளுக்கெதிரான குரல் இதுவாகும்.

- இவ்வாறு தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கின்றார். 'ஒரு வேண்டுகோள்!' என்ற தலைப்பிலான அந்த அறிக்கையின் முழு விவரம் வருமாறு:-


ஜனாதிபதி வேட்பாளர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகிய இருவரினதும் தேர்தல் விஞ்ஞாபனங்கள் கடந்த வாரம் வெளியாகியுள்ளன. இருவரினதும் தேர்தல் விஞ்ஞாபனங்கள் நாம் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை இம்முறை ஜனாதிபதி தேர்தலில் நிறுத்தியிருப்பதன் தேவை மற்றும் அது தொடர்பிலான எமது சரியான முடிவு ஆகியவற்றை எடுத்துக்காட்டுகின்றன.

சுருக்கமாக சொல்வதானால் ரணில் விக்கிரமசிங்க மற்றும் சஜித் பிரேமதாஸ ஆகிய இருவருமே தற்போதைய அரசமைப்பின் 13 ஆவது திருத்த சட்டத்தின் கீழ் மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் பகிர்ந்து அளிக்கப்படும் என்று குறிப்பிட்டுள்ளார்கள். 13 ஆவது திருத்த சட்டம் பொலிஸ், காணி மற்றும் நிதி ஏற்பாடுகளுடன் முழுமையாக அமுல்படுத்தப்படும் என்று இருவருமே உறுதியளிக்கவில்லை. இது அதிகாரப் பகிர்வு தொடர்பில் அவர்களின் நிலைப்பாட்டை மிகவும் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. புதிய அரசமைப்பு ஒன்று ஏற்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று இருவரும் எந்தவிதமான விவரங்களும் இன்றி மொட்டையாக குறிப்பிட்டிருக்கின்றார்கள். புதிய அரசமைப்பில் தமிழ் தேசிய பிரச்சினை எவ்வாறு தீர்க்கப்படும் என்று எந்த யோசனைகளையும் இருவரும் துளியளவும் குறிப்பிடவில்லை. ஆகவே, அலுவலர்கள், பொலிஸ், காணி மற்றும் நிதி அதிகாரங்கள் பிடுங்கப்பட்டு தற்போது அரசப்பில் இருக்கும் பல மற்ற 13 ஆவது திருத்த சட்டத்தில் இருக்கும் அதிகாரங்களை ஒத்த அதிகாரப் பகிர்வே புதிய அரசமைப்பிலும் அவர்களின் யோசனையாக இருக்கும் என்பதில் எவரும் சந்தேகம் கொள்ள முடியாது.

இலங்கையின் அரசியல் யாப்பு ஒற்றையாட்சிக்கு உட்பட்டது. அப்படியிருந்தும் அரசமைப்பின் ஒரு அங்கமான 13 ஆவது திருத்த சட்டம் முழுமையாக அதன் தொடக்க அதிகாரங்களுடன் இந்திய - இலங்கை உடன்படிக்கையின் பிரகாரம் அமுல்படுத்தப்படவேண்டும் என்பதையே நாம் தொடர்ந்து வலியுறுத்தி வந்தோம். ஆனால், அதே நேரம் 13 ஆவது திருத்த சட்டம் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கான நிரந்தமான ஒரு தீர்வு அல்ல என்றும் இணைந்த வடக்கு - கிழக்கில் சமஷ்டி அடிப்படையிலான தீர்வே வேண்டும் என்றும் எல்லா தமிழ்த் தேசிய கட்சிகளும் மிகத்தெளிவாக வலியுறுத்தி வந்துள்ளார்கள்.

அப்படியிருக்க, ஏற்கனவே நாட்டின் அரசமைப்பில் இருக்கும் 13 ஆவது திருத்த சட்டத்தின் அற்பசொற்ப அதிகாரங்களை எமக்கு வழங்குவதாக தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடுவதும் பொலிஸ் மற்றும் ஏனைய அதிகாரங்கள் தொடர்பில் நாடாளுமன்றத்தின் ஊடாக முயற்சிக்கப்படும் என்று கூறுவதும் உங்களுக்கு 'கிள்ளிப்போடுவதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம்' என்பதே இந்த இரண்டு வேட்பாளர்களினதும் செய்தியாகும்.

அத்துடன் ஏற்கனவே அரசமைப்பில் தற்போது இருக்கும் எமக்குரிய அதிகாரங்களை தாம் தருவோம் என்று கூறுவதா தேர்தல் விஞ்ஞாபனத்தில்



இவர்கள் எமக்கு அளிக்கும் வாக்குறுதி? 13 ஆவது திருத்தச் சட்டம் தமிழ் மக்களின் சட்டரீதியான, ஜனநாயக ரீதியான உரிமை என்பதைக் கூட இவர்கள் இதுவரை ஏற்றுக் கொள்ளவில்லை என்பதைத்தானே இது காட்டுகின்றது?

அநுரகுமார திசநாயக்க மற்றும் நாமல் ராஜபக்ஷ ஆகியோரின் தேர்தல் விஞ்ஞாபனங்கள் இன்னமும் வெளியாகவில்லை. ஆனால், தமிழ் மக்களுக்கு அர்த்தமுள்ளவகையில் அதிகாரங்களை பகிர்ந்தளிக்க நாம் தயாராக இல்லை என்ற செய்தியை அவர்கள் ஏற்கனவே தெளிவாக வெளிப்படுத்தி விட்டார்கள். வடக்கையும் கிழக்கையும் பிரிக்க நடவடிக்கை எடுத்தவர் அநுரகுமார. நாமல் ராஜபக்ஷவைப் பற்றி நாம் கவலைப்படத் தேவையில்லை. அவர் எந்தக் காலத்திலும் வெல்லப் போவதில்லை.

எமக்கு தருவோம் என்று எல்லா சிங்கள வேட்பாளர்களும் குறிப்பிட்டிருப்பவை யாவும் மிக அற்பமானவை. அது ஒருபுறமிருக்க, எமக்கு தருவோம் என்று உறுதியளித்த மற்றும் செய்துகொண்ட ஒப்பந்தங்களை எல்லாம் காற்றில் இவர்கள் பறக்கவிட்டதே கடந்த 75 ஆண்டுகால வரலாற்று உண்மை. அதேசமயம், எந்தவிதமான இடைநிறுத்தல்களும் இன்றி எமது வடக்கு மற்றும் கிழக்கு தாயகத்தை பௌத்தமயமாக்கி சிங்கள குடியேற்றங்களை நிறுவும் கைங்கரியங்களை தொடர்ந்தும் முன்னெடுத்து வந்து தற்போது அவற்றை துரிதப்படுத்தியிருக்கின்றார்கள்.

உதாரணமாக கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்த பின்னர் 2020 ஆம் ஆண்டு கிழக்கு மாகாணத்தில் அவர் பௌத்த பிக்குகளை உள்ளடக்கி ஏற்படுத்திய தொல்லியல் பாரம்பரிய முகாமைத்துவ செயலணி, திருகோணமலையில் குறிப்பாக தமிழ் மக்களின் தாயகமான வடக்கையும் கிழக்கையும் இணைக்கும் குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் பல்லாயிரக்கணக்கான நிலங்களை ஆக்கிரமித்தனர். அங்கு 26க்கும் அதிகமான விகாரைகள் அமைக்கப்படுவதற்கு பின்னணியில் நின்று செயற்பட்டுள்ளனர். ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக்கு வந்த பின்னர் இந்த செயலணி இயங்கவில்லை என்றபோதிலும், இந்த விடயத்தில் கோட்டாபாயவின் கொள்கைகளை ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் தொடர்ந்து முன்னெடுத்துவருவதாக அண்மையில் மனித உரிமைகள் கண்காணிப்பகம் குறிப்பிட்டிருக்கின்றது. 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்த பின்னர் முல்லைத்தீவில் மட்டும் 67 பௌத்த விகாரைகள் அமைக்கப்பட்டுள்ளன. முல்லைத்தீவில் பொதுமக்கள் மற்றும் இராணுவம் இடையிலான விகிதம் 2:1ஆக இன்னமும் இருக்கின்றது. சுமார் 100 க்கும் மேற்பட்ட முகாம்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் மட்டும் அமைக்கப்பட்டுள்ளன. அதேவேளை, திருகோணமலையின் குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சில கிராமங்களை சிங்கள மாவட்டங்களுடன் இணைத்து வடக்கையும் கிழக்கையும் துண்டாடும் சில திட்டங்கள் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் தொடக்கம் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக நான் அறிகின்றேன்.

தமிழ் மக்களின் தாயக பிரதேசங்களை ஆக்கிரமித்து முற்றுமுழுதாக இலங்கையை ஒரு பௌத்த,

தொடர்ச்சி▼

# பொது வேட்பாளரைக் களம் இறக்கியமை ஒரு வகையில் இராஜதந்திரப் போராட்டம்

தொடர்ச்சி▲

சிங்கள நாடாக ஆக்கும் ஸ்ரீலங்கா அரசின் நிகழ்ச் சித்திட்டம் சுதந்திரம் கிடைத்த நாள் முதல் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. வரலாற்றை பார்க்கின்றபோது எந்த ஒரு ஜனாதி பதியோ அல்லது கட்சியோ இந்த நிகழ்ச்சி நிரலில் இருந்து பிறழ்ந்து ஒருபோதும் செயற்பட்டதில்லை. கடந்த 7 தசாப்தங்களில் பல்வேறு சந்தர்ப்பங்களில் எமது தமிழ் கட்சிகளும் தமிழ் அரசியல்வாதிகளும் அரசாங்கத்துடன் இணைந்தும் தேர்தல்களின்போது அவர்களுக்கு ஆதரவு வழங்கியும் இருக்கின்றார்கள். ஆனால், அவர்களினால் எமது தாயகத்தில் இடம் பெற்ற குடியேற்றங்களையோ அல்லது நில ஆக்கிர மிப்பையோ துளியளவும் நிறுத்தமுடியவில்லை.

உண்மையை சொல்லப்போனால், எமது இளை ஞர்கள் ஆயுதம் ஏந்தி போராடி வடக்கு மற்றும் கிழக்கை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த 30 வருட காலப்பகுதியினுள் மட்டுமே எமது நிலங்களை எம்மால் பாதுகாக்க முடிந்தது. ஆகவே, போராட்டம் மற்றும் எமது எதிர்ப்பு ஆகியவற்றின் மூலமே நாம் எமது உரிமைகளை பாதுகாப்பதற்கும் எமது இருப்பினை தக்கவைத்துக்கொள்வதற்கும் முடியும்.

ஆகவேதான், தமிழ் மக்கள் தமது அபிலாஷைகள் மற்றும் உரிமைகளை வலியுறுத்தி தமது போராட் டங்களை தீவிரப்படுத்தும் காலம் வந்துவிட்டது. நாம் வாளாதிருந்தால் எமது கண்முன்னேயே எமது தாயகம் பிறர் வசம் கைமாறிவிடும். ஆகவே தான் இந்த சந்தர்ப்பத்தில் இம்முறை ஜனாதிபதி தேர்தலை நாம் உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். அதற்காக ஆயுதம் ஏந்தி போராடு மாறு நான் வலியுறுத்தவில்லை - அது பொருத்த மானதும் அல்ல. நாம் அரசியல் மற்றும் ராஜதந்திர ரீதியாக பல்வேறு வடிவங்களில் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும். ஏற்கனவே நாமும் எமது வெளிநாட்டு உறவுகளும் எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக ஐக்கிய நாடுகள் அறிக்கை இலங்கைக்கு எதிராக வர இருக்கின்றது.

அதனால் தான் நாம் இனிமேலும் உங்களின் போலி வாக்குறுதிகளையும் ஏமாற்றுக்களையும் நம்பப்போவதில்லை என்ற செய்தியை நாம் சிங்கள அரசியல்வாதிகளுக்கு எடுத்து கூற வேண்டும். அதேவேளை சிங்கள அரசியல்வாதிகள் எந்த ஒரு நியாயமான தீர்வினையும் எமக்கு முன் வைக்கப் போவதில்லை என்பதையும் அவர்களை நம்புவதற்கு நாம் தயாராக இல்லை என்ற செய்தியினையும் சர்வதேச சமூகத்துக்கு எடுத்துரைக்க வேண்டும். இனிமேலும் தாமதம் செய்யாமல் இலங்கை விடயத் தில் நீங்கள் தலையிடவேண்டும் என்று தமிழ் பொதுவேட்பாளர் ஊடாக நாம் ஓங்கி ஒலிக்கவிருக் கின்றோம். இது காலம் எமக்கு ஏற்படுத்தியிருக்கின்ற ஒரு சந்தர்ப்பமும் நிர்ப்பந்தமும் ஆகும்.

இது வெறுமனே ஒரு எதிர்ப்பு நடவடிக்கை மட்டும் அல்ல. மாறாக இது ஓர் இராஜதந்திர போராட்டமும் கூட. அத்துடன் இது ஒரு அரசியல் செயற்பாடும் ஆகும். தமிழ் மக்கள் தமது தாயகத்தில் ஒன்றுதிரண்டு சிங்கள அரசுக்கும் சர்வதேச சமூகத் துக்கும் வெளிப்படுத்தும் எமது அபிலாஷைகளுக்கான குரல், உரிமைகளுக்கான குரல் மற்றும் அடக்கு முறைகளுக்கெதிரான குரல் இதுவாகும். இத்தனை காலமும் சிங்கள ஜனாதிபதி வேட்பாளர்களுடன் ஒத்துழைத்து அவர்களுக்கு வாக்களித்து ஏமாற்றப் பட்ட நாம் அவர்களின் சூழ்ச்சிகள், ஏமாற்றுக்கள் மற்றும் அடக்குமுறைகளுக்கு எதிராக அவர்களுடன் ஒத்துழையாமல் அவர்களுக்கு வாக்களிக்காமல் முன்னெடுக்கும் ஓர் ஒத்துழையாமை போராட்ட மாகவும் இதனைக் கொள்ளலாம்.

அன்புக்குரிய தமிழ் மக்களே! இலங்கையின் எந்த பகுதியில் வாழ்ந்தாலும் , நீங்கள் எமது தமிழ் பொது வேட்பாளர் அரியநேத்திரனுக்கு அவ ரின் சங்கு சின்னத்துக்கு வாக்களித்து தமிழராக ஒன்றுபட்டு குரல் எழுப்புவதற்கு தயாராகுமாறு வேண்டிக்கொள்கின்றேன்.

அரசாங்கத்துக்கும் சிங்கள அரசியல் தலைமைக ளுக்கும் அடிவருடிகளாக செயற்படும் எமது சில அரசியல்வாதிகளின் விஷமத்தனமான கதைகளை நம்பாதீர்கள்.

இந்த தமிழ் பொதுவேட்பாளர் முன்னெடுப்பை இவர்கள் 'முட்டாள் தனமான செயற்பாடு', 'கேலிக் கூத்து', 'அரசியல் தற்கொலை', 'விஷப்பரீட்சை' என்று விமர்சித்து வருகின்றார்கள். இத்தகையவர்கள் யார் என்பது உங்களுக்கு தெரியும். வெல்லமுடியாத ஒரு தமிழ் பொதுவேட்பாளருக்கு வாக்குகளைப் போடக்கூடாது என்றும் ஒரு சிங்கள வேட்பாளருக்கு வாக்குகளை இட்டு பேரம் பேச வேண்டும் என்றும் காரணம் சொல்கின்றார்கள். கடந்த காலத்திலும் இப்படித்தான் சிங்கள அரசியல் தலைவர்களுடன் பேரம்பேசுவதாக கூறி எமது வாக்குகளை அவர்க ளுக்கு பெற்றுக்கொடுத்து, இன்று தமிழ் மக்களை நடுத்தெருவுக்கு கொண்டுவந்துள்ளார்கள் இவர்கள். இவ்வாறு பேரம் பேசப் போவதாக கூறுபவர்கள், முதலில் தம் கடந்த கால பேரப்பேச்சுக்களினால் அவர்கள் எதனைச் சாதித்தார்கள் என்று கூறவேண் டும். வெல்ல முடியாது என்றால் அடக்குமுறையாள ருடன் கைகோர்க்கவேண்டும் என்பதா இவர்களின் அரசியல் சித்தாந்தம்? அல்லது தனிப்பட்ட சலுகை களை அவர்களிடம் இருந்து பெற இவர்கள் துடிக்கின் றார்களா?

இம்முறை தேர்தல் கடந்த எல்லா தேர்தல்களை யும் விட முக்கியமானது என்றும் இம்முறை கூடுத லாக பேரம் பேச முடியும் என்றும் அவர்கள் கூறுகி றார்கள். ஒவ்வொரு தேர்தல்களிலும் 'இம்முறை தேர்தல் முக்கியமானது' என்று கூறித்தான் இவர்கள் தமிழ் மக்களை ஏமாற்றி வந்துள்ளார்கள். கடந்த தேர்தல்களில் இவர்கள் என்ன கூறினார்கள் என் பதை வேண்டுமானால் பத்திரிகைகளை எடுத்து படித்துப்பாருங்கள். அடுத்த முறை தேர்தல் வரும் போதும் இதுதான் முக்கியமான தேர்தல் என்று கூறுவார்கள். பேரம் பேசி ஏற்கனவே அரசியல் யாப்பில் உள்ள 13வது திருத்தச் சட்டத்தின் அமு லாக்கத்தை ஏற்பாடு செய்ய உள்ளார்களா?

தேர்தல் என்ற ஒரு வாய்ப்பை பயன்படுத்தி நாம் எமது அபிலாஷைகள் மற்றும் உரிமைகளை வலியுறுத்துவதையும் அடக்குமுறைகளை வெளிப் படுத்துவதையும் கேலிக்கூத்து என்றும் முட்டாள் தனமானது என்றும் கூறும் இவர்களை மக்கள் நன்றாக அடையாளம் கண்டு எதிர்வரும் நாடாளு மன்ற தேர்தலில் அவர்களுக்கு பாடம் புகட்டவேண் டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன். இவர்க ளால் எமது பாராம்பரிய தமிழ்க்கட்சி இன்று சின்னா பின்னமாக்கப்பட்டுள்ளது. இவர்களின் நிமித்தமாகவே நான் இலங்கை தமிழரசுக் கட்சியை விட்டு வெளி யேற வேண்டி வந்தது.

தேசிய மற்றும் சர்வதேச அரசியல் சூழ்நிலைகள் காலத்துக்கு காலம் மாறுபட்டுவரும் வேளையில் நாமும் காலத்துக்கு காலம் எமது அபிலாஷைகள் மற்றும் உரிமைகளை வலியுறுத்தி அரசாங்கத்துக்கும் சர்வதேச சமூகத்துக்கும் தேசமாக ஒன்று திரண்டு செய்திகளை சொல்லித்தான் ஆகவேண்டும். தற் போது அந்த காலம் மீண்டும் எமக்கு வந்திருக்கின்றது. ஆகவே, எனதருமை தமிழ் மக்களே! நீங்கள் இந்த நாட்டின் எந்த மூலையில் வாழ்ந்தாலும் தமிழராக திரண்டு தமிழ் பொது வேட்பாளருக்கு அவரின் சங்கு சின்னத்துக்கு புள்ளடியிடவேண்டும் என்று நான் கோரிக்கை விடுக்கின்றேன்.

அத்துடன், சோரம்போனவர்களினதும், பூச்சாண்டி காட்டுபவர்களினதும் கதைகளுக்கு எடுபடாமல் தமிழ் தேசிய அரசியலை துணிச்சலாகவும் அறிவு பூர்வமாகவும் அடுத்த கட்டத்துக்கு முன்னெடுத்து செல்வதற்கு தமிழ் மக்களுக்கு நீண்ட காலமாக அரசியல் தலைமை வகித்துவரும் இலங்கை தமிழ ரசு கட்சி கூட தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதர வான நிலைப்பாட்டை எடுத்து, தமிழ் மக்களை தேசமாக திரட்டுவதற்கு ஏனைய தமிழ் தேசிய கட்சிகளுடன் ஒன்றுபட்டு செயற்படுவதற்கும் உரிய நடவடிக்கை எடுப்பதற்கும் தந்தை செல்வாவின் ஆன்மாவும் தமிழ் தேசிய போராட்டத்தின் வரலாறும் வழிகாட்டும் என்று நான் திடமாக நம்புகின்றேன். - என்று உள்ளது.






# அரியத்தின் இலக்கற்ற பயணத்தில் தமிழரசு இணையுமா?!



புருஜோத்தமன் தங்கமயில்


ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்புக்கு இன்னமும் இருபது நாள்களே இருக்கின்றன. தென்னிலங்கையின் பிரதான வேட்பாளர்கள் நாளும் பொழுதும் பிரச்சார நடவடிக்கைகள், ஆதரவாக ஆள்பிடிக்கும் வேலைகள், தேர்தல் விஞ்ஞாபன வெளியீடுகள், பொருளாதார கொள்கை முன்வைப்பு மாநாடுகள் என்று பரபரப்பாக ஓடிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளரான பாக்கியசெல்வம் அரியநேத்திரனுக்கான (அரியம்) தேர்தல் பிரச்சாரக் கூட்டங்கள் பெரியளவில் இதுவரை இடம்பெறவில்லை. அவருக்காக பொதுக் கட்டமைப்பின் கட்சிகள், அரசியல் பத்தியாளர்கள் கலந்து கொண்ட ஒரேயொரு பிரச்சாரக் கூட்டம் மாத்திரமே நடைபெற்றிருக்கின்றது. அந்தக் கூட்டத்தை புளொட் ஒழுங்கமைத்திருந்தது. அதில், முந்நூறு பேரளவில் கலந்து கொண்டிருந்தார்கள். அவர்களில், அதிகமானோர், புளொட் அமைப்பினால் நடத்தப்படும் சுயஉதவிக் குழுக்களில் அங்கம் வகிக்கும் பெண்கள். மற்றப்படி பெரியளவில், ஆள்களைத் திரட்டி எந்தவித பிரச்சாரக் கூட்டமும் இதுவரை நடைபெறவில்லை. இந்தப் பத்தி எழுதப்படும் வரையில், அரியத்துக்கான பொதுக் கட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனமும் வெளியிடப்படவில்லை.

தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற அடையாளத்தை முன்வைத்து அரியத்தை ஜனாதிபதி வேட்பாளராக பொதுக் கட்டமைப்பினர் அறிவித்தார்கள். ஆனால், அந்தக் கட்டமைப்புக்குள் எந்தவித ஒழுங்கும் ஒழுக்கமும் காணப்படவில்லை. கட்சிகளுக்கும் அரசியல் பத்தியாளர்களுக்கும் இடையில் 'பகையுணர்வு' உறவு முறையே நீடிக்கின்றது. பொதுக் கட்டமைப்பின் கட்சிகள், அதன் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பில் அரசியல் பத்தியாளர்களுக்கு நம்பிக்கையீனமும் அச்சமும் காணப்படுகின்றது. பொது வேட்பாளராக அரியத்தை அறிவித்த பின்னரும் கூட ரணிலின் அழைப்பை ஏற்று சந்திப்புக்கு பொதுக் கட்டமைப்பின் கட்சிகள் செல்வது என்பது, துரோகத்தனமானது என்பது அரசியல் பத்தியாளர்களின் நிலைப்பாடு. இதனை, அவர்கள் பொதுக் கட்டமைப்பின் இறுதிச் சந்திப்பின் போது வெளிப்படுத்தவும் செய்தார்கள். இந்த விடயம், இரு தரப்பினருக்கும் இடையில் பெரும் வாதப் பிரதிவாதங்களுக்கு வித்திட்டது. இறுதியில், அரசியல் பத்தியாளர் ஒருவர் தன்னுடைய வார்த்தைகளை மீளப்பெறும் அளவுக்கு நிலைமை இருந்தது. அதுபோல, அரியத்துக்கான தேர்தல் விஞ்ஞாபனம் என்று அறிக்கையொன்றை பத்தியாளர்கள் முன்வைத்த போது, அது தேர்தல் விஞ்ஞாபனம் ஒன்று கொண்டிருக்க வேண்டிய விடயங்களை உள்ளடக்கியிருக்கவில்லை என்று கட்சிகள் நிராகரித்துவிட்டன. திரும்பவும் புதிதாக தேர்தல் விஞ்ஞாபனம் தயாரிக்கும் பணிகள் நடைபெறுகின்றன. அந்தப் பணி நிறைவுற்று, அதனை பொதுக் கட்டமைப்பு எப்போது தேர்தல் விஞ்ஞாபனமாக வெளியிடும் என்று இன்னமும் தெரியவில்லை.

அரியத்துக்கான வாக்குச் சேகரிப்பு நடவடிக்கைகளில் முழு முயற்சியோடு ஈடுபடுவது, தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட கிளையினர் மாத்திரமே. அரியத்தை, பொதுக் கட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளராக முன்னிறுத்தியமை மற்றும் அவருக்காக சங்குச் சின்னத்தை தெரிவு செய்ததில், சிவஞானம் சிறீதரன் முக்கிய பங்கை வகித்தார். தமிழரசுக் கட்சியின் புதிய தலைவருக்கான தேர்தலில் சிறீதரனுக்காக அரியம் ஆதரவாக செயற்பட்டார். அவர்களுக்கு இடையில் நல்ல உறவு இருக்கின்றது. எதிர்காலத்தில், தமிழரசுக் கட்சியின் தலைவராக சிறீதரன் மீளத் தெரிவாகும் நிலை வந்தாலோ அல்லது அவர் புதிய அரசியல் பயணத்தை மேற்கொண்டாலோ, அதில் கிழக்கின் தளபதியாக அரியம் இருப்பார் என்பது பலரின் எதிர்பார்ப்பு. அரியம், வேட்பாளராக அறிவிக்கப்பட்டதும் மட்டக்களப்பைச் சேர்ந்த சிலர், அரியம் சிறீதரனின் ஆதரவோடும் வாக்குறுதிகளோடும்தான், ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்கத் தயாரானார் என்று கூறினார்கள். தமிழரசுக் கட்சியின் மாவட்டக்குழு 'வட்ஸ்அப்' குழு உரையாடல்கள் தொடக்கம், சமூக ஊடக பதிவுகள் வரையில் அவை வெளிப்படுத்தப்படுகின்றன.

ஜனாதிபதி வேட்பாளராக தங்களின் அனுமதியின்றி போட்டியிடும் அரியத்திடம், தமிழரசுக் கட்சி விளக்கம் கோரியிருக்கின்றது. அத்தோடு, அவருக்கு ஆதரவளிக்கும் கூட்டங்கள், பிரச்சார நடவடிக்கைகளில் கட்சியினர் ஈடுபடக்கூடாது என்றும் அந்தக் கட்சியின் மத்திய குழுவினால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. அந்த நிலையிலும், தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சிக் கிளையினர், அரியத்துக்காக பிரச்சார நடவடிக்கைகளில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர். அதன் ஒருபடி மேல் சென்று, சிறீதரன், அரியத்தின் பிரச்சார நடவடிக்கைகளுக்காக நிதி சேகரிக்கும் பிரித்தானிய நிகழ்வுகளில் கலந்து கொண்டிருக்கின்றார். அத்தோடு, தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளை மற்றும் திருகோணமலையின் முன்னாள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர் குழுவினர் அரியத்துக்கான ஆதரவு நிலைப்பாட்டை வெளிப்படையாக அறிவிப்பதிலும் சிறீதரனின் பங்கு பிரதானமானது.

தொடர்ச்சி▼



# அரியத்தின் இலக்கற்ற பயணத்தில் தமிழரசு இணையுமா?!

தொடர்ச்சி▲

தமிழரசுக் கட்சி இன்று கிட்டத்தட்ட செங்குத்தாக பிளந்திருக்கின்றது. கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, தலைவராக தேர்வாகி நீதிமன்ற தடையுத்தரவினால் பதவி ஏற்காத சிறீதரன் உள்ளிட்டோர் பொது வேட்பாளர் அடையாளத்தோடு வரும் அரியத்துக்கு ஆதரவாளிக்கும் நிலைப்பாட்டில் இருக்கிறார்கள். எம்.ஏ.சுமந்திரன், சி.வி.கே.சிவஞானம் உள்ளிட்டவர்கள் பொதுவேட்பாளர் நிலைப்பாட்டை முட்டாள்தனம் என்று அறிவிக்கிறார்கள். அது, மறைந்த பெருந்தலைவர் இரா.சம்பந்தனின் நிலைப்பாட்டினை ஒத்தது. தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்தை அரங்கிற்கு அறிமுகப்படுத்தியது பொதுக் கட்டமைப்பினர்தான். ஆனால், இன்றைக்கு அது தமிழரசுக் கட்சியின் உள்வீட்டுக் குழப்பங்களில் யாரின் கை ஓங்குகின்றது என்பதைத் தீர்மானிக்கும் கருவியாக கையாளப்படுகின்றது. அரியம் வடக்கு கிழக்கில் பெறும் வாக்குகளில் கிளிநொச்சி வாக்குகள் கணிசமாக இருக்க வேண்டும் என்பது சிறீதரனின் நிலைப்பாடு. அதற்காக அவர், அடிமட்டத்தில் தொடர்ச்சியாக பிரச்சார நடவடிக்கைகளில் தீர்க்கமாக ஈடுபடுகிறார். அவர் வெளிப்படுத்தும் தீவிரத்தன்மையில் சிறுபகுதியை பொதுக் கட்டமைப்பின் கட்சிகளும் பத்தியாளர்களும் வெளிப்படுத்தினால் இலட்சத்துக்கு அண்மித்த வாக்குகளை அரியம் சிலவேளை பெறக்கூடும். ஆனால், அதற்கான எந்தவித சூழலும் பொதுக் கட்டமைப்புக்குள் இல்லை.

பொதுக் கட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளராக தான் ஏன் முன்னிறுத்தப்பட்டிருக்கிறேன் என்பது தொடர்பில் அரியத்துக்கு எந்தவித தெளிவான நிலைப்பாடும் இல்லை. தேர்தல் இலக்கு - நோக்கம் - செயற்திட்டம் என்ன என்பதுவும் அவருக்கு தெரியாது. அதனை, அவரே தொலைக்காட்சி பேட்டியொன்றில் வெளிப்படுத்தியிருக்கிறார். இந்த ஜனாதிபதித் தேர்தலில் பிரதான வேட்பாளர்களாக பார்க்கப்படுபவர்கள், தங்களின் வெற்றியை நோக்கி போட்டியிடுகிறார்கள். இன்னும் சிலரோ, பிரதான வேட்பாளர்களின் பினாமி வேட்பாளர்களாக - வாக்குப் பிரிக்கும் கருவிகளாக களத்தில் இறக்கப்பட்டிருக்கிறார்கள். குறிப்பாக, இன, மத, சாதி அடையாள வாக்குகளைப் பிரிப்பதற்காக பிரதான வேட்பாளரான ரணில் விக்ரமசிங்கவினால் முன்னிறுத்தப்பட்டிருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டுக்கள் உண்டு. தமிழ்ப் பொது வேட்பாளர் அடையாளத்தின் மீதும் அவ்வாறான குற்றச்சாட்டுக்களும் சந்தேக பார்வையும் உண்டு. ஏனெனில், பொது வேட்பாளர் விடயத்தை யார் தூக்கிக் கொண்டு அரங்கிங்கு கொண்டு வந்தவர்கள் என்பதில் இருந்து அது ஆரம்பித்தது.

ஜனாதிபதி வேட்பாளராக தான் ஏன் போட்டியிடுகிறேன் என்பது தொடர்பிலான தெளிவும் - விளக்கமும் அரியத்துக்கு இல்லாதது மாதிரி, அதனை முன்வைக்கும் தரப்புக்களிடத்திலும் இல்லை. பொதுக் கட்டமைப்பில் உள்ள சில கட்சிகள் இந்தியாவின் ஆணைக்கு முழுவதுமாக ஆடும் தரப்பினர். சில ஆண்டுகளுக்கு முன்னால், 13 ஆவது திருத்தத்தை தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கான தீர்வுத் திட்டமாக கருத வேண்டும் என்ற தோரணையில் நகர்வுகளை மேற்கொண்டிருந்தவர்கள். ‘மக்கள் மனு’ என்ற பெயரில் யாழ் ஊடக முதலாளி ஒருவரும் அவருக்கு இணக்கமாக பத்தியாளர் ஒருவரும் வடக்கிலும் கிழக்கிலும் கொழும்பிலும் 13 ஆவது திருத்தத்துக்கு ஆதரவாக பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தவர்கள். இன்னும் சில பதிவு செய்யப்படாத கட்சியினர், 13 ஆவது திருத்தத்தை முற்றாக புறக்கணிப்பவர்கள். அதில், சிலர், முன்னாள் ஆயுதக்குழுக்களாக இருந்த கட்சியினர் ஒழுங்கமைக்கும் பிரச்சாரக் கூட்டங்களிலும் நிகழ்வுகளிலும் பங்கெடுக்க மாட்டோம் என்ற நிலைப்பாட்டில் இருப்பவர்கள். அரியத்துக்கான முல்லைத்தீவு பிரச்சாரக் கூட்டத்தில் கலந்து கொள்ளாதவர்களைப் பார்த்தாலே அது புரியும்.

பொதுக் கட்டமைப்பின் பத்தியாளர்களில் சிலர் ஒருபோதும் இந்தியாவை விமர்சிக்கும் நிலைப்பாட்டின் பக்கத்துக்கு நகரத் தயாராக இல்லாதவர்கள். அதனை, அரியம் அஞ்சலி செலுத்திய இரு நிகழ்வுகள் பிரதிபலிக்கவும் செய்தன. தந்தை செல்வாவின் சமாதியில் அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டிருந்த அரசியல் பத்தியாளர்கள் சிலர், தியாகி திலீபனின் நினைவுத் தூபியில் அஞ்சலிக்கும் போது கூட இருக்கவில்லை. திலீபன் பேரினவாதத்துக்கு எதிரான ஆகுதியாக மாத்திரமல்ல, பிராந்திய வல்லரசின் அடக்குமுறைகளுக்கு எதிரான அடையாளமாகவும் தமிழ்த் தேசியப் போராட்டத்தினால் முன்வைக்கப்படுபவர். அப்படியான நிலையில், திலீபனின் அஞ்சலி நிகழ்வில் கலந்து கொள்வது, இந்தியாவின் யாழ். துணைத் தூதரக அதிகாரிகளைக் கோபப்படுத்தும் என்பது அரசியல் பத்தியாளர்களுக்கு தெரியும். அந்த அச்சம் அவர்களுக்கு இருப்பது இயல்பானது. ஏனெனில், துணைத்தூதரகத்தோடு மிக நெருக்கமாக இருப்பவர்களுக்கு தேவையற்ற நெருடல்களை உருவாக்குவது எதிர்காலத்தில் சிக்கல்களை உருவாக்கலாம்.

தொடர்ச்சி▼



# அரியத்தின் இலக்கற்ற பயணத்தில் தமிழரசு இணையுமா?!

தொடர்ச்சி▲

தமிழ்ப் பொது வேட்பாளர் தமிழ்த் தேசிய அரசியலின் பொது வாக்கெடுப்புக்கான கருவியாக கையாளப்படுவதாக பொதுக் கட்டமைப்பினர் முதலில் அறிவித்தார்கள். ஆனால், பொது வாக்கெடுப்புக்கான களம் ஜனாதிபதித் தேர்தல் அல்ல. அதனை அப்படிக் கூறி, பொது வேட்பாளரினால் தமிழ் மக்களின் ஐம்பது வீதமான வாக்குகளைப் பெற முடியாது போனால், அது தமிழ்த் தேசியப் போராட்டத்தின் தோல்வியாகிவிடும் என்று விமர்சிக்கப்பட்டதும், பொது வாக்கெடுப்பு என்ற நிலைப்பாட்டை கைவிட்டார்கள். அடுத்து, பிரிந்திருக்கும் தமிழ்த் தேசிய வாக்குகளை ஒருங்கிணைக்கும் கருவியாக பொது வேட்பாளர் முன்னிறுத்தப்படுகிறார் என்று அறிவித்தார்கள். இடையில், பொது வேட்பாளர் விடயத்தின் ஊடாக சர்வதேசத்துக்கு செய்தி சொல்வோம் என்றும் கூறினார்கள். இலங்கையின் சுதந்திரத்துக்கு முந்தைய காலத்தில் இருந்து தமிழ் மக்களின் அரசியல் செய்தி தெளிவாக பலமுறை சொல்லப்பட்டிருக்கின்றது. புதிதாக சொல்வதற்கு ஏதுமில்லை என்ற விடயம் பேசு பொருளானதும், சர்வதேசத்துக்கு செய்தி சொல்வதும் கைவிடப்பட்டது. இப்போது, இறுதியாக எஞ்சியிருப்பது தமிழ் வாக்குகளை ஓரணியில் திரட்டுதல் என்ற வாதம் மாத்திரமே.

அது தவிர்ந்து, தமிழ்த் தேசியப் போராட்டக் களத்தினை அடுத்த கட்டத்துக்கு எப்படி நகர்த்தப் போகின்றோம் என்றோ, எதிர்கால தீர்வுத் திட்டங்களை நோக்கிய நகர்வு எப்படி இருக்கும் என்றோ பொதுக் கட்டமைப்பினர் இதுவரை தெளிவுபடுத்தவில்லை. தமிழன் வாழ்வில் ‘சங்கின் வகிபாகம்’ எவ்வளவு முக்கியம் என்று எதுகை மோனைக் கதைகளைக் கூறுவதற்கு செலவிடும் நேரத்தை, பொது வேட்பாளரின் இலக்கு - செயற்திட்டங்களுக்காக செலவிட்டிருந்தால், அந்த நிலைப்பாடு தொடர்பில் ஓரளவுக்காவது தெளிவு கிடைத்திருக்கும். அந்தத் தெளிவு மக்களை சில வேளை நம்பிக்கையின் பக்கம் தள்ளியிருக்கும். அதனை விடுத்து, சுய தன்முனைப்பு போட்டிக்களமாக ஜனாதிபதித் தேர்தல் களத்தை கையாள தனி நபர்கள் சிலர் முனைவது அற்பத்தனமும் அபத்தமானதுமாகும்.

தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்தை, தங்களின் ஆளுமையை காட்டுவதற்கான கருவியாக புலம்பெயர் அமைப்புக்கள் சிலவும் வர்த்தகர்கள் சிலரும் கையாள்கிறார்கள். அவர்களுக்கு முள்ளிவாய்க்காலுக்குப் பின்னராக தமிழ்த் தேசிய அரசியலை கையாள வேண்டும் என்ற பேரவா இருந்தது. ஆனால், அது, சம்பந்தனின் அரசியலுக்கு முன்னால் எடுபடாமல் போனது. இப்போது, அவரின் மறைவுக்குப் பின்னராக களத்தை தங்களுக்கு சாதகமாக்க முயல்கின்றன. அந்தச் சக்திகள், தமிழ்த் தேசிய அரசியலில் ஆளுமை செலுத்துவோர், எதிர்கால தேர்தல் - பதவி கனவுகளோடு இயங்குபவர்கள் உள்ளிட்டவர்களை குறிவைத்து இயங்குகின்றன. தொடர்ச்சியான தொலைபேசி அழைப்புக்கள், அதனூடு விடுக்கப்படும் அழுத்தங்கள், பணப் பேரங்கள் என்று அனைத்துக் கட்டங்களினூடாகவும் தாயகத்து அரசியலை தாங்கள் கையாளுகிறோம் என்ற தோற்றத்தை உருவாக்கிவிட வேண்டும் என்று தலையால் நடக்கிறார்கள். எப்போதுமே, எதிர்கால செயற்திட்டங்கள் அற்ற அரசியலை தாயகத்தில் நிரற்படுத்தி, புலம்பெயர் சக்திகளின் கைப்பொம்மை அரசியலுக்கான ஏற்பாட்டினை பொது வேட்பாளர் விடயத்தினூடு கையாளுதல் அபத்தமானது. அதன் தொடர்ச்சியாக பொதுத் தேர்தல், உள்ளூராட்சி மன்றத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல்களைக் கையாள முடியும் என்றும் நம்புகிறார்கள்.

எந்தவித இலக்குகளும் அற்ற - பகட்டு - நடிப்புத் சுதேசிய அரசியலை தமிழ்த் தேசிய அரசியல் தூக்கிச் சுமக்க முடியாது. தமிழ்ப் பொது வேட்பாளர் அடையாள அரசியலும் அது சார்ந்ததுதான். அப்படியான ஒரு நிலைப்பாட்டினை தமிழ்த் தேசிய அரசியலின் முதன்மைக் கட்சியான தமிழரசுக் கட்சி எப்படிக் கையாளப் போகின்றது என்பது முக்கியமானது. பொது வேட்பாளர் விடயம் தொடர்பில் தீர்க்கமான முடிவுகளை எடுக்காது, நழுவல் போக்கில் விடயத்தை கடத்தி விடலாம் என்று நினைத்தால், அது தமிழரசுக் கட்சியின் ஆளுமைத் திறனை கேள்விக்குள்ளாக்கும். அதன் பின்னர், தாங்கள்தான் தமிழ் மக்களின் பிரதான கட்சியினர் என்ற உரித்துக் கோரல்கள் அர்த்தமற்றதாகிவிடும். அது, தமிழரசுக் கட்சியையும் பத்தோடு பதினொன்றாக மாற்றிவிடும். அதன் விளைவுகளை எதிர்வரும் தேர்தல்களில் எதிர்க்கொள்ள வேண்டி வரும். தமிழ்த் தேசிய அரசியலின் முதன்மைக் கட்சியாக தமிழரசுக் கட்சி தமிழ் மக்களை வழிப்படுத்தும் பொறுப்புண்டு. அதனை, முதலில் செய்ய வேண்டும். இல்லாது போனால், அரியமும் பொதுக் கட்டமைப்பினரும் மேற்கொள்ளும் இலக்கற்ற பயணத்தின் பங்காளிகளாக தமிழரசுக் கட்சியினரும் அடையாளம் பெறுவார்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 01.09.2024




நீங்கள் இன்று கோவில் விழாக்களில் பங்கு கொள்வீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். மேலும் திருப்தி கிடைக்கும். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். இதனை சமாளிக்க திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் தகவல் பரிமாற்றத்தில் பிரச்சினைகள் காணப்படும். இதற்கு உங்களிடம் காணப்படும் அகந்தை போக்கே காரணமாகும்.

இன்று கூடுதல் செலவினங்கள் ஏற்படும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்ய சிறிய அளவில் கடன் வாங்குவீர்கள்.

நரம்பு சம்பந்தப்பட்ட பிரச்சினைகளால் பாதிக்கப்படலாம். இதனால் தலைவலி ஏற்படலாம். உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும்.




இன்று சுறுசுறுப்புடன் காணப்படுவீர்கள். ஆற்ற வேண்டிய செயல்கள் அதிகமாக இருக்கும். அதிக முயற்சியின்றி உங்கள் இலக்குகளை அடைவீர்கள். பரந்த நோக்குடன் இருப்பீர்கள். புதிய கருத்துகளை கொண்டிருப்பீர்கள். உங்கள் ஆர்வம் அதிகரிக்கும்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளை நிரூபிப்பீர்கள். குறித்த நேரத்துக்கு முன்பே பணிகளை முடிப்பீர்கள். இதற்கு உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டுக் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் நேர்மையான அணுகுமுறை கொள்வீர்கள். இதனால் உங்கள் பிரியமானவர் உங்களை நன்கு புரிந்து கொள்வார்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும்.




இன்று மகிழ்சிகரமான நாளாக அமையாது. வெற்றியை நோக்கி உங்கள் இலக்குகளை அமைத்துக் கொள்வது சிறந்தது. இன்று அதிர்ஷ்டத்தை நம்பாதீர்கள்.

பணியில் யதார்த்தமான அணுகுமுறை வெற்றியை அளிக்கும். இதன் மூலம் எளிதில் வெற்றி பெறலாம்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் துணையுடன் மோதல் ஏற்படும். இதனால் தவறான புரிந்துணர்வு ஏற்படும். இதனை பரஸ்பரம் தீர்த்துக் கொள்ள வேண்டும்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்காது. கூடுதல் செலவினங்கள் ஏற்படும். அது சுமையாக காணப்படும். கவலையை உண்டாக்கும்.ணமன உளைச்சல் காரணமாக கால் வலி ஏற்படும்.




இன்று எதிர்பார்த்த பலன்கள் கிடைக்காது. இன்று உங்கள் அணுகுமுறையில் உறுதி மிகவும் அவசியம்.

பணிச்சூழல் திருப்திகரமாக இருக்காது. இன்று காணப்படும் பணி இறுக்கம் உங்களை கவலைக்குள்ளாக்கும். உங்கள் பணி வழிமுறைகளை திட்டமிட வேண்டும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். வாக்குவாதங்கள் ஏற்படுவதற்கான சாத்தியம் உள்ளது.

இன்று பண வரவுக்கான சாத்தியம் உள்ளது. பணத்தை கவனமாகவும் சாதுர்யமாகவும் செலவு செய்ய வேண்டும்.

உங்கள் குழந்தைகளின் ஆரோக்கியத்திற்காக செலவு ஏற்படலாம். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.




இன்று ஆக்கபூர்வமான பலன்கள் கிடைக்காது. இதனால் தன்னம்பிக்கையும் உறுதியும் இழந்து காணப்படுவீர்கள். மாற்றங்களும் பயணங்களும் காணப்படும். இன்று உற்சாகமாக இருக்க வேண்டியது அவசியம்.

உங்கள் பணிகளை முறையாக செய்ய வேண்டும். பணிச்சுமை காரணமாக இன்று பணியில் தவறுகள் நேரலாம்.

பாதுகாப்பற்ற உணர்வின் காரணமாக உங்கள் துணையிடம் தேவையற்ற வார்த்தைகளை பேசுவீர்கள். இதனை தவிர்த்தல் வேண்டும். பக்குவமான அணுகுமுறையோடு அன்பாக பழக வேண்டும்.இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். உங்கள் உடனடித் தேவைகளை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.




இன்றைய தினம் சிறப்பாக அமைய நீங்கள் திட்டமிட வேண்டும். எடுக்கும் முடிவுகள் சரியானதாயிருக்க ஒன்றுக்கு இரண்டு முறை யோசிக்க வேண்டும். பெரியவர்களின் ஆலோசனையை கேட்பது நன்று.

பணி நிமித்தமான பயணங்கள் ஏற்படலாம். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் துணையிடம் உங்கள் மன உணர்வுகளை வெளிப்படுத்த முனைவீர்கள். உறவில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த இதனை தவிர்த்தல் நலம்.

இன்று கூடுதல் செலவுகள் ஏற்படக் காண்பீர்கள். இன்று பணம் சேமிப்பதற்கான வாய்ப்பு குறைவு.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக அமையும்.புதிய தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்வீர்கள். இது உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும். இன்று உங்கள் விருப்பம் நிறைவேறும் நாள்.

உங்கள் சக பணியாளர்கள் ஆதரவாகவும் உதவிகரமாகவும் இருப்பார்கள். புதிய வேலைக்கான வாய்ப்பு உள்ளது. பயணங்கள் ஏற்படலாம்.

உங்கள் சமயோசித புத்தி காரணமாக உங்கள் துணையிடம் நல்லுறவு கொண்டிருப்பீர்கள்.உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு சென்று வருவீர்கள்.

உங்கள் கடின உழைப்பின் மூலமாக ஊக்கத்தொகை மற்றும் சலுகைகள் வகையில் பண வரவு காணப்படும். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும். திடமாக காணப்படுவீர்கள்.




இன்று பலன்கள் தாமதமாக கிடைக்கும் சூழ்நிலை காணப்படுகின்றது. இன்று அவ்வளவு சிறப்பான நாளாக அமையாது. இன்று எதையும் எதிர்பார்க்காதீர்கள்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். இது உங்களுக்கு கவலை அளிக்கும். உங்கள் பணியாற்றும் முறையை திட்டமிட்டு செயலாற்றுங்கள்.

சமநிலையும் நகைச்சுவை அணுகுமுறையும் உங்கள் துணையை நன்கு புரிந்து கொள்ள உதவும். உங்கள் பிரியமானவரிடம் பேசும் போது கவனமாகப் பேசவும்.

நிதி வளர்ச்சி இன்று மகிழ்ச்சிகரமானதாக காணப்படாது. கூடுதல் செலவினங்கள் ஏற்படலாம்.

உங்கள தாயின் சிறிய உடல் நலப் பிரச்சினை ஒன்றிற்காக பணம் செலவு செய்ய நேரும்.

# இன்றைய ராசி பலன்கள் - 01.09.2024




ஆன்மீக நாட்டம் வளர்ச்சியையும் ஆறுதலையும் தரும். இன்றைய நாளை சிறப்பானதாக ஆக்க புது வழிகள் காண்பீர்கள். அவசர முடிவுகள் எதையும் எடுக்காதீர்கள். அதனால் எந்தப் பயனும் கிடைக்காது.

உங்கள் அன்றாட பணிகளை கவனமுடன் செய்ய வேண்டும். பணியில் தவறுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையிடம் அகந்தையின்றி பழக வேண்டும். உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் மனம் திறந்து கூற வேண்டும்.

இன்று நிதியில் ஏற்ற இறக்கங்கள் காணப்படும். இன்று காணப்படும் பணப்பற்றாக்குறை உங்களுக்கு கவலையை அளிக்கும்.

மன உளைச்சல் மற்றும் கால் வலிக்கான சாத்தியம் உள்ளது. நீங்கள் ஆரோக்கியமாய் இருக்க அமைதியாய் இருக்க வேண்டும்.




இன்று சிறப்பான நாள். இன்று சுறுசுறுப்புடனும் மும்மரமாகவும் காணப்படுவீர்கள். இன்று நற்பலன்கள் கிடைக்கும்.

பணியிடத்தில் புதிய வாய்ப்புகள் உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். பணியில் நற்பெயர் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் அமைதி பராமரிப்பீர்கள். இதனால் உங்கள் துணையுடனான உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

இன்று நிதிவளர்ச்சி சீராக காணப்படும். நீங்கள் கணிசமான தொகை சேமிப்பீர்கள்.

இன்று ஆரோக்கிய பிரச்சினை ஏதும் காணப்படாது. சிறந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.




இன்று ஆன்மீக அணுகுமுறையை நீங்கள் பற்றிக்கொள்வீர்கள். உங்கள் தன்னம்பிக்கையால் சாதனை புரிவீர்கள். இன்று அதிர்ஷ்டத்தை அனுபவிக்கும் நாள். மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

இன்று பணிகளை அமைதியாக மேற்கொள்வீர்கள். உங்களின் இந்த அணுகுமுறை உங்களுக்கு வெற்றியை பெற்றுத் தரும்.

உங்களின் அனுசரணையான போக்கு உங்கள் துணையை மகிழ்விக்கும். எனவே இன்றைய நாள் இனிமையாக இருக்கும். உறவில் திருப்தி நிலவும்.

இன்று பண வளர்ச்சி சிறப்பாக காணப்படும். சலுகை அல்லது ஊக்கத்தொகையாக இன்று பணம் கிடைக்கும். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

நீங்கள் சிறந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.




நீங்கள் விரும்பும் பலன்கள் கிடைக்கும் அளவிற்கு இன்றைய தினம் சாதகமாக இருக்காது. மனக்குழப்பத்திற்கு ஆளாக நேரலாம். பதட்டப்படாமல் இன்றைய பணிகளை திட்டமிடுங்கள்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். உங்கள் பணிகளை திட்டமிட வேண்டும். இன்று திட்டமிட்டு பணிகளை மேற்கொள்வது மிகவும் அவசியம்.

இன்று உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனால் கருத்து வேறுபாடு ஏற்படும். எனவே நட்பான அணுகுமுறை தேவை.

பயணத்தின் போது பண இழப்புகள் ஏற்படலாம். எனவே பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று ஆரோக்கியம் குறைந்து காணப்படுவீர்கள். ஜீரணம் சம்பத்தப்பட்ட பிரச்சினைகள் காணப்படும்.








# தமிழகம் உள்ளிட்ட தென்னிந்தியாவின் வளர்ச்சிக்கு முன்னுரிமை வழங்கப்படும்

## பிரதமர் மோடி தெரிவிப்பு

தென்னிந்தியா மகத்தான திறமைகள், வளங்கள் மற்றும் வாய்ப்புகளின் பூமி. தமிழ்நாடு உள்பட ஒட்டுமொத்த தென்னிந்தியாவின் வளர்ச்சியே அரசின் முன்னுரிமை என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மூன்று வந்தே பாரத் ரயில்களை பிரதமர் நரேந்திர மோடி நேற்று காணொலிக் காட்சி மூலம் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

மதுரை - பெங்களூரு, சென்னை - நாகர்கோவில், மீரட் - லக்னோ ஆகியவை அந்த மூன்று வழித்தடங்களாகும். சென்னை எழும்பூர் - நாகர்கோவில் இடையேயான வந்தே பாரத் ரயில், இரு நகரங்களுக்கும் இடையிலான தற்போதைய அதிவேக ரயிலுடன் ஒப்பிடும்போது 2 மணி நேர பயணத்தை மிச்சப்படுத்தும். இதேபோல், மதுரை - பெங்களூரு வந்தே பாரத் ரயில் 1 மணி நேரம் 30 நிமிட பயணத்தையும், மீரட் - லக்னோ இடையேயான வந்தே பாரத் ரயில் சுமார் 1 மணி நேர பயணத்தையும் மிச்சப்படுத்தும்.

வந்தே பாரத் ரயில்களை துவக்கி வைத்து பிரதமர் நரேந்திர மோடி உரையாற்றுகையில்,

“இந்தியாவின் வடக்கிலிருந்து தெற்கு நோக்கிய வளர்ச்சிப் பயணத்தில் மதுரை - பெங்களூர், சென்னை - நாகர்கோவில், மீரட் - லக்னோ வந்தே பாரத் ரயில்கள் என இன்று புதிய அத்தியாயத்தைக் காண்கின்றன. வந்தே பாரத் ரயில்களின் நவீனமயமாக்கல் மற்றும் விரிவாக்கம் காரணமாக தேசம், வளர்ச்சி அடைந்த இந்தியா எனும் இலக்கை நோக்கி முன்னேறி வருகிறது.

கோயில் நகரமான மதுரை, இப்போது ஐடி சிட்டி பெங்களூருடன் இணைக்கப்பட்டுள்ளது. குறிப்பாக வார இறுதி நாட்கள் அல்லது பண்டிகை காலங்களில் இது இணைப்பை எளிதாக்குவது மட்டுமல்லாமல், பயணிகளுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். சென்னை - நாகர்கோவில் வழித்தடமானது மாணவர்கள், விவசாயிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு பெரிதும் பயனளிக்கும். வந்தே பாரத் ரயில்களுடன் இணைக்கப்பட்ட இடங்களில் சுற்றுலா வளர்ச்சி மேலும் அதிகரிக்கும்.

வளர்ச்சி அடைந்த இந்தியா எனும் இலக்கை நிறைவேற்ற தென் மாநிலங்களின் விரைவான வளர்ச்சி இன்றியமையாதது. தென்னிந்தியா மகத்தான திறமைகள், வளங்கள் மற்றும் வாய்ப்புகளின் பூமி. தமிழ்நாடு உள்பட ஒட்டுமொத்த தென்னிந்தியாவின் வளர்ச்சியே அரசின் முன்னுரிமை. ரயில்வேயின் வளர்ச்சிப் பயணம் அரசின் அர்ப்பணிப்புக்கு எடுத்துக்காட்டு. 2014 ஆம் ஆண்டோடு ஒப்பிடும்போது, அதைவிட 7 மடங்கு அதிகமாக இந்த ஆண்டு தமிழகத்தின் ரயில் பட்ஜெட்டுக்கு 6,000 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. தற்போது, தமிழகத்தில் மொத்த வந்தே பாரத் ரயில்களின் எண்ணிக்கை 8 ஆக உயர்கிறது. இதேபோல், 2014 ஆம் ஆண்டை விட 9 மடங்கு அதிகமாக இந்த ஆண்டு பட்ஜெட்டில் கர்நாடகாவிற்கு 7,000 கோடி ரூபா பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்டுள்ளது. இன்று 8 வந்தே பாரத் ரயில்கள் கர்நாடகாவை இணைக்கின்றன.

வந்தே பாரத் இந்திய ரயில்வேயின் நவீனமயமாக்கலின் புதிய முகம். ஒவ்வொரு நகரத்திலும், ஒவ்வொரு வழித்தடத்திலும் வந்தே பாரதத்திற்கான கோரிக்கை எழுந்த வண்ணம் உள்ளது. அதிவேக ரயில்களின் வருகையானது மக்கள் தங்கள் வணிகம் மற்றும் வேலைவாய்ப்பை விரிவுபடுத்துவதோடு அவர்களின் கனவுகளையும் விரிவுபடுத்துவதற்கான நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. இன்று, நாடு முழுவதும் 102 வந்தே பாரத் ரயில் சேவைகள் இயக்கப்படுகின்றன. இதுவரை 3 கோடிக்கும் அதிகமான மக்கள் இந்த ரயில்களில் பயணம் செய்துள்ளனர். இந்த எண்கள் வந்தே பாரத் ரயில்களின் வெற்றிக்கான ஆதாரம் மட்டுமல்ல, இவை இந்தியாவின் விருப்பங்கள் மற்றும் கனவுகளின் சின்னம்.

இந்திய நகரங்கள் எப்போதும் அவற்றின் ரயில் நிலையங்களால் அடையாளம் காணப்படுகின்றன. அம்ரித் பாரத் ரயில்நிலைய திட்டத்தின் மூலம், ரயில் நிலையங்கள் மேம்படுத்தப்பட்டு, நகரங்களுக்கு புதிய அடையாளத்தை வழங்குகின்றன. நாட்டில் உள்ள 1300க்கும் மேற்பட்ட ரயில் நிலையங்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. அவற்றில் சில, விமான நிலையங்களைப் போல் காட்சி அளிக்கின்றன. மிகச்சிறிய ரயில் நிலையங்கள் கூட அதிநவீன வசதிகளுடன் உருவாக்கப்பட்டு வருகின்றன.

ரயில்வே, சாலைகள் மற்றும் நீர்வழிகள் போன்ற இணைப்புக் கட்டமைப்புகள் வலுப்பெறும் போது, நாடு வலுப்பெறுகிறது. ஏழைகளாக இருந்தாலும் சரி, நடுத்தர வகுப்பினராக இருந்தாலும் சரி, நாட்டின் சாமானிய குடிமக்களுக்கு அவை நன்மை பயக்கின்றன. மருத்துவமனைகள், கழிப்பறைகள் மற்றும் வீடுகள் ஆகியவை சாதனை எண்ணிக்கையில் கட்டப்படுவதால் ஏழைகளும் நாட்டின் வளர்ச்சியின் பயனைப் பெறுகிறார்கள். கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழில்துறை உள்கட்டமைப்புகள் வளரும்போது, அவை இளைஞர்களின் முன்னேற்றத்திற்கான வாய்ப்பையும் அதிகரிக்கின்றன. இதுபோன்ற பல முயற்சிகளால் கடந்த 10 ஆண்டுகளில் 25 கோடி பேர் வறுமையில் இருந்து மீண்டுள்ளனர்.”- என்றார்.



# தூத்துக்குடியில் பட்டாசு ஆலை விபத்து; இரண்டு தொழிலாளர்கள் உயிரிழப்பு

நாசரேத் அருகே பட்டாசு ஆலையில் ஏற்பட்ட விபத்தில் 2 தொழிலாளர்கள் உயிரிழந்துள்ளனர். 2 பெண்கள் உட்பட 4 பேர் காயமடைந்தனர்.

தூத்துக்குடி மாவட்டம் நாசரேத் அருகே குறிப்பான்குளத்தை அடுத்துள்ள காட்டுப்பகுதியில் இந்த பட்டாசு ஆலை உள்ளது. இந்த ஆலையில் 6 தொழிலாளர்கள் வழக்கம் போல் பணியில் இருந்தனர்.

இவர்கள் இருந்த அறைக்கு அருகே உள்ள அறையில் திடீரென பட்டாசுகள் வெடித்தன. இதில் இருந்த வந்த தீப் பொறிகள் விழுந்து, தொழிலாளர்கள் பணியாற்றிய அறையில் இருந்த பட்டாசுகளும் வெடிக்க தொடங்கின. இதிலிருந்து தொழிலாளர்கள் வெளியே செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. இந்த விபத்தில், அறையில் பணியில் இருந்து முத்துகண்ணன், விஜய் ஆகியோர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். செல்வம், பிரசாந்த், செந்தூர்கனி, முத்துமாரி ஆகியோர் காயமடைந்தனர்.

தகவல் அறிந்து, நாசரேத் பொலிஸாரும், ஸ்ரீவைகுண்டம், சாத்தான்குளம் தீயணைப்பு வீரர்களும் சம்பவ இடத்துக்கு வந்து மீட்பு பணியில் ஈடுபட்டனர். கட்டட இடிபாடுகள் அதிகமாக இருந்ததால், ஜே.சி.பி. இயந்திரத்தின் உதவியுடன் மீட்பு பணிகள் நடந்தன. இதில், காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையிலும், சாத்தான்குளம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உயிரிழந்தவர்களின் சடலங்கள் மீட்கப்பட்டு திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.





# 22 பேருடன் பயணித்த ஹெலிக்கொப்டர் மாயம்

வாக்கசெட்ஸ் எரிமலை பகுதியிலிருந்து நிக்கோலேவ்காவை நோக்கிப் பயணித்த ரஷ்யாவின் எம்.ஐ -8டி ரக ஹெலிக்கொப்டர் ஒன்று காணாமல் போயுள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

3 பணியாளர்கள் உட்பட 22 பேருடன் பயணித்த அந்த ஹெலிக்கொப்டர் கிழக்கு கம்சட்கா தீபகற்பத்தில் காணாமல் போனதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில், காணாமல் போன ஹெலிக்கொப்டரை தேடும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

முன்னதாகக் கடந்த ஒகஸ்ட் 12 ஆம் திகதி 16 பேருடன் பயணித்த வானூர்தியொன்று கிழக்கு கம்சட்காவில் விபத்துக்குள்ளாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 24 மணித்தியாலங்களில் 12 பாலஸ்தீனியர்கள் பலி



கடந்த 24 மணித்தியாலங்களில் காசா மீதான தாக்குதலில் 12 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

அத்துடன், நூற்றுக்கணக்கானோர் காயமடைந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

காசாவின் பல பகுதிகளில் மின்சார விநியோகம் முழுமையாக நிறுத்தப்பட்டுள்ளமையினால் வைத்தியசாலைகளின் மருத்துவ செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

# உக்ரைன் விமானப்படையின் தளபதி மைகோலா ஓலேஷ்சுக் பதவி நீக்கம்

உக்ரைனின் விலையுயர்ந்த புதிய எப் - 16 போர் விமானம் ஒன்று அழிக்கப்பட்டது தொடர்பான விவாதத்திற்கு மத்தியில் உக்ரைன் விமானப்படை தளபதியை ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி பதவி நீக்கம் செய்துள்ளார்.

லெப்டினன்ட் ஜெனரல் மைகோலா ஓலேஷ்சுக்கை பணிநீக்கம் செய்ததற்கான காரணத்தை ஜெலென்ஸ்கி குறிப்பிடவில்லை, ஆனால், அனைத்து வீரர்களையும் கவனித்துக் கொள்ளும் பொறுப்பு தனக்கு இருப்பதாக கூறினார்.

டெலிகிராமில் ஒரு இடுகையில், ஜெலென்ஸ்கி, லெப்டினன்ட் ஜெனரல் ஓலெஸ்சுக்கை மாற்ற முடிவு செய்ததாகக் கூறினார், கட்டளை மட்டத்தில், நாம் நம்மைப் பலப்படுத்திக் கொள்ள வேண்டும் மற்றும் எங்கள் மக்களைப் பாதுகாக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்.



உக்ரைனின் விமானப்படையின் இடைக்கால தளபதியாக லெப்டினன்ட் ஜெனரல் அனடோலி கிரிவோனோஷ்கோ நியமிக்கப்பட்டுள்ளார் என இராணுவத்தின் பொது ஊழியர்கள் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

பெப்ரவரி 2022 இல் ரஷ்யா தனது முழு அளவிலான படையெடுப்பைத் தொடங்கியதிலிருந்து ஜெலென்ஸ்கி பல இராணுவத் தளபதிகளை பதவி நீக்கம் செய்துள்ளார். இந்த ஆண்டு பெப்ரவரியில், அவர் நாட்டின் ஆயுதப் படைகளின் தளபதி வலேரி ஜலுஷ்னியை பதவி நீக்கம் செய்தார்.

மேலும் ஜுன் மாதம், அவர் லெப்டினன்ட் ஜெனரல் யூரி சோடோலை, அதிகப்படியான உயிரிழப்புகள் மற்றும் திறமையின்மை குற்றச்சாட்டுகள் பற்றிய பொது விமர்சனத்திற்குப் பிறகு பதவி நீக்கம் செய்தார்.






# யூனியன் அஷ்யூரன்ஸ் *SLIM* உடன் கைகோர்ப்பு

இலங்கையின் முன்னணி ஆயுள் காப்புறுதி சேவை வழங்குநரான யூனியன் அஷ்யூரன்ஸ், இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவகத்துடன் கைகோர்த்து, தனது முன்னணி ஆலோசகர்களின் தொழில்நிலை மேம்பாட்டுக்கான விசேட நிகழ்ச்சித் திட்டங்களை வழங்க முன்வந்துள்ளது.

யூனியன் அஷ்யூரன்ஸ் நிறுவனத்தின் பயிலல் கல்வியக மூலோபாயத்துக்கமைவானதாக இந்த கைகோர்ப்பு அமைந்துள்ளது.

அதனூடாக, முகவர் மற்றும் பாங்கசூரன்ஸ் பிரிவுகளைச் சேர்ந்த ஆலோசகர்களின் நிபுணத்துவ வளர்ச்சி மற்றும் திறன்களை மேம்படுத்தி, வாடிக்கையாளர்களின் அதிகரித்துச் செல்லும் தேவைகளை நிவர்த்தி செய்யக்கூடிய வகையில் அவர்களை தயார்ப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

புதிய திட்டத்தினூடாக இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவகத்தினால் வடிவமைக்கப்பட்ட பிரத்தியேகமான பயிற்சி அமர்வுகள் வழங்கப்பட்டு, ஆலோசகர்களின் திறன்கள் மேம்படுத்தப்படும்.

அதனூடாக சிறந்த சேவைகளை பெற்றுக் கொடுப்பதில் அவர்களுக்கு முன்னிலையில் திகழக்கூடியதாக இருக்கும். கொழும்பில் அமைந்துள்ள யூனியன் அஷ்யூரன்ஸ் தலைமையகத்தில் பங்காண்மையின் அறிமுக நிகழ்வு உத்தியோகபூர்வமாக முன்னெடுக்கப்பட்டது.

இதில் தெரிவு செய்யப்பட்ட 50 ஆலோசகர்கள் இந்த திட்டத்துக்காக அறிமுகம் செய்யப்பட்டனர். இந்தத் திட்டத்தினூடாக ஆலோசகர்களுக்கு கிடைக்கும் பிரதான அனுகூலமாக, இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவகத்திடமிருந்து சான்றிதழைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும். அவர்களின் தொழில்நிலை முன்னேற்றத்துக்கு அவசியமான தகைமைகளை பெற்றுக் கொடுப்பதாக இது அமைந்திருக்கும்.

யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம முகவர் அதிகாரி இம்தியாஸ் ஆனிப் கருத்துத் தெரிவிக்கையில்,

"பயிலல் மற்றும் விருத்தியை ஊக்குவிப்பதில் யூனியன் அஷ்யூரன்ஸ் தன்னை எப்போதும் அர்ப்பணித்துள்ளது. அதனூடாக தனது அங்கத்தவர்களுக்கு சிறந்த திட்டங்களை பெற்றுக் கொடுக்க முடிந்துள்ளது.

இந்தத் திட்டத்துக்காக இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவகத்துடன் இணைந்து செயலாற்ற முடிந்துள்ளதையிட்டு நாம் மகிழ்ச்சியடைவதுடன், எமது ஆலோசகர்களுக்கு தமது தொழில்நிலைகளில் சிறப்பாக இயங்குவதற்கு அவசியமான திறன்களை பெற்றுக் கொடுக்கின்றது.

இந்தத் திட்டத்தை மேலும் விஸ்தரிப்பதற்கு நாம் திட்டமிட்டுள்ளோம், அதனூடாக, எமது ஆலோசகர்களினால் எம் வாடிக்கையாளர்களுக்கு தொடர்ந்தும் உயர் மட்ட சேவைகளை பெற்றுக் கொடுப்பதை உறுதி செய்யக்கூடியதாக இருக்கும்." - என்றார்.







# டயலொக் ஆசிஆட்டாவுடன் எயார்டெல் லங்கா இணைவு

டயலொக் ஆசிஆட்டா பி.எல்.சி. ஆனது வரையறுக்கப்பட்ட (தனியார்) பார்த்தி எயார்டெல் லங்காவுடன் கம்பனிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வெற்றிகரமாக ஒன்றிணைந்துள்ளது.

இதன்படி ஒன்றிணைந்த நிறுவனம் டயலொக்கின் பெயரால் தொடரும். இதன்படி 2024 ஆகஸ்ட் 30 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் எயார்டெல்லின் செயற்பாட்டு செயற்திறன் டயலொக்கின் நிதிக்கக் கூற்றுகளுக்குள் முழுமையாக அடக்கப்பட்டு ஒருங்கிணைக்கப்படும்.

இது ஒரு கூட்டுத்தாபன நிறுவனமாக எயார்டெல் லங்காவின் உத்தியோகபூர்வ நிறுத்தத்தை பதிவு செய்கிறது.

இந்த மூலோபாய ரீதியான மைல்கல் இலங்கையின் டிஜிட்டல் உட்கட்டமைப்பில் பாரியதொரு முன்னேற்றகரமான படியை பிரதிபலிக்கிறது.

நாடு முழுவதும் காத்திரமான டிஜிட்டல் சேவைகளையும் மேம்பட்ட இணைப்பையும் வழங்க ஆசிஆட்டா மற்றும் பார்த்தி குழுமங்களின் கூட்டு பலம் மற்றும் அர்ப்பணிப்பை இது எடுத்துக்காட்டுகிறது.

இரு அமைப்புகளுக்கும் இடையிலான இந்த ஒத்துழைப்பானது அவர்களது ஒட்டுமொத்த நிபுணத்துவம், வளங்கள், புத்தாக்க தகவுகள் அனைத்தும் இலங்கையின் டிஜிட்டல் உருமாற்றத்தில் டயலொக்கை முன்னிலை வகிக்கும் வகையில் நிலை நிறுத்தும்.

இந்த ஒருங்கிணைப்பை தொடர்ந்து, டயலொக்கின் சந்தாதாரர் தளம் 20 மில்லியனை கடந்தது. தேசத்தின் முதற்தர தொலைத்தொடர்பு சேவை வழங்குனராக அதன் இடத்தை மேலும் வலுப்படுத்தியுள்ளது.

இவ்வலையமைப்பு ஒன்றிணைவு எதிர்வரும் மாதங்களில் முன்னேற்றங்களை காண்கையில் டயலொக் மற்றும் எயார்டெல் வாடிக்கையாளர்கள் இணைப்பையும் கடந்த விஸ்தீரணமான சேவைகள் மற்றும் வாடிக்கையாளர் அனுபவம், புத்தாக்கம், டிஜிட்டல் சேவைகள் ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் முதலியவற்றை எதிர்பார்க்கலாம்.

புதிய கட்டமைப்பினுள்ளான எயார்டெல் வர்த்தக நாமத்தின் தொடர்ச்சி, வாடிக்கையாளர்களுக்கு எயார்டெல் மீது கொண்டிருந்த மதிப்பு மற்றும் நம்பிக்கையை தொடரவைக்கும். இது டயலொக்கின் பரந்த சலுகைகளை அனுபவிப்பதற்கான சந்தர்ப்பத்தையும் அளிக்கும்.

இந்த ஒன்றிணைவு டயலொக் நாட்டின் டிஜிட்டல் வளர்ச்சிக்கு காட்டும் அயராத அர்ப்பணிப்பையும், பொருளாதார அபிவித்திக்கு அளிக்கும் பங்களிப்பையும், தொலைத்தொடர்பு கைத்தொழிற்துறையில் வகுக்கும் புதிய அடைவுமட்டங்களையும் பிரதிபலிக்கிறது.

இந்த ஒருங்கிணைவு மூலம் உருவாக்கப்படும் ஒருங்கியக்கங்களை கையாள்வதன் ஊடாக வளர்ந்து வரும் டிஜிட்டல் உலகில் தனிநபர்களும் வணிகங்களும் தொடர்ந்து முன்னேற அவர்களுக்கு உந்துசக்தியாய் திகழ டயலொக் அர்ப்பணிப்புடன் செயலாற்றுகிறது.




# களுத்துறை தெற்கு பொதுமக்களின் நன்மைக்காக அம்பியுலன்ஸை பொறுப்பேற்றது மக்கள் வங்கி




நிறுவன சமூகப் பொறுப்புணர்வை மிகச் சிறப்பாக வெளிக்காண்பிக்கும் வகையில், 'அம்பியுலன்ஸ் ஒன்றைப் பொறுப்பேற்போம்' என்ற முயற்சியின் கீழ் 1990 சுவசரிய அம்பியுலன்ஸ் சேவைக்கு நன்கொடையளித்துள்ளமை குறித்து மக்கள் வங்கி பெருமையுடன் அறிவித்துள்ளது.

சமூக நலனை மேம்படுத்தி, உதவியை எதிர்பார்த்துள்ள நபர்கள் உரிய நேரத்தில் தேவையான மருத்துவப் பராம ரிப்பைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பினை வழங்குவதில் வங்கியின் ஓயாத அர்ப்பணிப்பை இந்த நன்கொடை சிறப்பாக வெளிக்காண்பிக்கின்றது.

மக்கள் வங்கியால் பொறுப்பேற்கப்பட்டு, முழுமையான புதுப்பித்தல் பணிகளுடன், வங்கியின் இலச்சினை பொறித்த அம்பியுலன்ஸ் வண்டியை கையளிக்கும் உத்தியோகபூர்வ நிகழ்வில் இம்முயற்சி வெளிக்காண பிக்கப்பட்டது.

இந்த வாகனம் களுத்துறை தெற்கிலுள்ள புதிய சேவைத் தளத்திற்கு அனுப்பி வைக்கப்படுவதற்கு முன்ப தாக, கொழும்பு 02 இல் அமைந்துள்ள மக்கள் வங்கி தலைமை அலுவலகத்தில் உத்தியோகபூர்வமாக கைய ளித்து வைக்கும் வைபவம் இடம்பெற்றது.

அவரச மருத்துவ சேவைகளில் முன்னோடியான 1990 சுவ சரிய பவுண்டேஷன், இலங்கை எங்கிலும் சுகாதாரப் பராமரிப்பு சேவைகளுக்கான அணுகலை மேம்படுத்துவதில் நீண்ட பணியை ஆற்றியுள்ளது. இந்த நோக்கத்தில், 'அம்பியுலன்ஸ் ஒன்றைப் பொறுப்பேற்போம்' என்ற முயற்சியானது அம்பியுலன்ஸ் வண்டிகளை தரமுயர்த்தி, சேவைகள் கிடைக்கப்பெறாத பிரதேசங்களில் சேவைகளை வழங்க உதவுவதில் முக்கிய பங்கு வகிக்கின்றது.

இதுதொடர்பில் மக்கள் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி/ பொது முகாமையாளர் கிளைவ் பொன்சேகா கருத்து தெரிவிக்கையில்,

“உரிய நேரத்தில் மருத்துவ உதவியை வழங்க உதவுவது மட்டுமன்றி, இலங்கையில் ஒட்டுமொத்த சுகாதாரப் பராமரிப்பு உட்கட்டமைப்பை வலுப்படுத்தும் இந்த முயற்சிக்காக 1990 சுவ சரிய பவுண்டேஷனுடன் கைகோர்ப்பதையிட்டு நாம் பெருமை கொள்கின்றோம்.” - என்றார்.

# *DeafTawk* மூலம் செவிப்புலனற்றோரும் வாடிக்கையாளர் சேவை வழங்கும் டயலொக்




இலங்கையின் #1 இணைப்பு வழங்குனரான டயலொக் ஆசிஆட்டா பி.எல்.சி, நாடுமுழுவதும் உள்ள தனது வாடிக்கையாளர் சேவை நிலையங்களில் DeafTawk மொழிபெயர்ப்பு சேவைகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

செவிப்புலன் குறைபாடு உள்ளவர்களுக்கு சேவைகளை இலகுவாக அணுகும்தன்மையை மேம்படுத்தும் பொருட்டு இந்த முயற்சி முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இயலாமையுடையவர்களை (PWDs) சென்றடையக்கூடிய வகையில் சேவைகளை சிறப்பாக மேம்படுத்துவதன் மூலம் அவர்களை உள்ளிணைப்பதில் நிறுவனம் காட்டும் தொடர்ச்சியான அர்ப்பணிப்பின் வெளிப்பாடாக இது அமைகிறது.

DeafTawk சேவை மூன்று மொழிகளில் செவிப்புலன் குறைபாடுடைய பயனர்களுக்கு தகுதிவாய்ந்த சைகை மொழிபெயர்ப்பாளர்களுடன் தொடர்புகொள்ள உதவும் தளமாகும்.

இதன் மூலம், செவிப்புலனற்றவர்கள் DeafTawk ஐப் பயன்படுத்தி வாடிக்கையாளர் சேவை பிரதிநிதிகளுடன் எளிதில் தொடர்பு கொள்ள முடியும்.

ஒரு சேவை நிலையத்திற்குச் செல்கையில், சைகை மொழியில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள வழிகாட்டல்கள் மூலம் தேவையுடைய வாடிக்கையாளர்கள் குறிப்பிட்ட சேவைப் பகுதியை நோக்கி வழிநடத்தப்படுவார்கள். அங்கு ஒரு பிரதிநிதி DeafTawk Appஐப் பயன்படுத்தி சைகை மொழி மொழிபெயர்ப்பாளருடன் தொடர்புகொள்வார், அவர் இரண்டு தரப்பினருக்கும் இடையே தொடர்பை எளிதாக்குவார்.

இது குறித்து டயலொக் ஆசிஆட்டா பி.எல்.சியின் குழும பிரதம வாடிக்கையாளர் அதிகாரி சாண்ட்ரா டீ சொய்ஸா அவர்கள் கருத்து தெரிவிக்கையில்,

“எங்கள் சேவைகளை அனைவரும் சமமாக அணுகுவதற்கான எமது நீண்டகால திட்டப் பயணத்தின் இரண்டாவது கட்டத்தை அறிமுகப்படுத்துவதில் நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம்.

பார்வை குறைபாடுகள், அறிவாற்றல் சவால்கள் மற்றும் பலவற்றை உள்ளடக்கிய இயலாமையு டையவர்களின் மாறுபட்ட தேவைகளை பூர்த்தி செய்ய dialog.lk-ஐ வெற்றிகரமாக மறுவடிவமைப்பு செய்தமை யையடுத்து, DeafTawk-ஐ எங்கள் சேவையுடன் ஒருங்கிணைப்பதன் மூலம் செவிப்புலனற்றோருக்கு உதவி பெறுவதில் உள்ள தொடர்பாடல் தடைகளைத் தகர்க்க முடியும். எமது வாடிக்கையாளர்களை எங்களின் அனைத்து நடவடிக்கைகளிலும் மையமாகக் கொண்டு செயற்படுவதில் டயலொக் உறுதியாக இருக்கிறது.” - என்றார்.









# டிமென்ஷியாவைத் தடுக்கும் 'நடைபயணம், ஓட்டம்' நிகழ்வு

அல்சைமர் நோய் மற்றும் ஏனைய வடிவிலான டிமென்ஷியா என்பன வயது முதிர்ச்சியுடன் பரவலாக அதிகரித்து வருகின்றன.

பிராந்தியத்தில் வேகமாக அதிகரித்துவரும் வயதுமுதிர்ந்தவர்களின் எண்ணிக்கையை எதிர்கொண்ட நாடுகளில் ஒன்றாக இலங்கை காணப்படுவதுடன், 2025ஆம் ஆண்டாகும் போது அரை மில்லியனுக்கும் அதிகமானவர்கள் டிமொன்ஷியாவுடன் வாழ்வார்கள் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

உலக அல்சைமர் மாதமாக செப்டம்பெர் மாதமும், உலக அல்சைமர் தினமாக செப்டெம்பர் 21 ஆம் திகதியும் அங்கீகரிக்கப்பட்டிருக்கும் நிலையில், அல்சைமர் நோய் சர்வதேச அமைப்பின் உறுப்பினரான லங்கா அல்சைமர் மன்றம் தொடர் நிகழ்வுகளை ஏற்பாடு செய்துள்ளது.

ஒரு மாத கால விழிப்புணர்வு பிரசாரத்தின் ஆரம்பத்தைக் குறிக்கும் வகையில், நினைவாற்றல் இழப்பு மற்றும் ஆற்றல் குறைவு போன்ற அறிகுறிகளைக் கொண்ட ஒரு வகை டிமென்ஷியாவான அல்சைமர் நோய் குறித்து பொது மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த கொழும்பின் அடையாளமாக விளங்கும் தாமரைக் கோபுரக் கட்டடம் செப்டெம்பர் 1 ஆம் திகதி சிற்பு நிறத்தில் ஒளிரும்.

டிமென்ஷியா ஏற்படுத்துவதை காலதாமதப் படுத்தும் அல்லது தடுக்கும் உடல் ரீதியான மற்றும் உளரீதியான பயிற்சியை ஊக்குவிக்கும் வகையில் லங்கா அல்சைமர் மன்றம் செப்டெம்பர் 07ஆம் திகதி பிற்பகல் 4.30 மணிக்கு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் இருந்து Run to Remember என்ற 5 கிலோ மீற்றர் ஓட்ட நிகழ்வையும், செப்டெம்பர் 14 ஆம் திகதி மு.ப 7.30 மணிக்கு கொழும்பு சினமன்ட் கிரான்ட் ஹோட்டலில் இருந்து என்ற நிகழ்வையும் ஏற்பாடு செய்துள்ளது.

லங்கா அல்சைமர் மன்றத்தின் முக்கிய சேவைகள் பெரும்பாலும் தன்னார்வத் தொண்டர்கள் மற்றும் நன்கொடைகளால் ஆதரிக்கப்படுகின்றன.









இவை விழிப்புணர்வை ஏற்படுத்தல், இடர் குறைப்பு, நினைவுப் பரிசோதனை மற்றும் மதிப்பீடு, செயற்பாட்டு மையத்தை நடத்துதல், பராமரிப்பாளர் குழுக்களை வலுப்படுத்தல், உதவிக்கான விசேட மையத்தை இயக்குதல், குழுக்களை ஆதரித்தல், ஹெல்ப்லைனை இயக்குதல், அடையாளம் காணக்கூடிய கை வளையல்களை வழங்குதல் மற்றும் உளநல ஆலோசனை வழங்கல் என்பனவும் அடங்கும். டிமென்ஷியாவுடன் வாழும் நபர்கள் மற்றும் அவர்களின் பராமரிப்பாளர்களை இலக்கு வைத்து இந்த முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

பிரதான அனுசரணையாளர்களான ஏ.டி.இசட் இன்ஷூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரைவட்) லிமிடட், தாமரைக் கோபுரம், விஜயா நியூஸ்பேப்பர்ஸ், ஹாய் ஒன்லைன், தாஜ் சமுத்திரா ஹோட்டல், சினமன்ட் கிரான்ட் போன்ற பல்வேறு அனுசரணையாளர் களின் ஒத்துழைப்பினாலேயே அல் சைமர் மாதத்தின் செயற்பாடுகள் சாத்தியமாகியுள்ளன.

பாரிய தொற்றா நோயான இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து லங்கா அல்சைமர் மன்றத்தின் இவ்வருட செயற்பாடுகளுடன் இலங்கை சமூக மருத்துவர்களின் கல்லூரியும் இணைந்துள்ளது.







# யூனியன் வங்கி தனது மேம்படுத்தப்பட்ட *UBgo Mobile App* ஐ அறிமுகம் செய்துள்ளது

யூனியன் வங்கி தனது மேம்படுத்தப்பட்ட UBgo mobile app ஐ அறிமுகம் செய்துள்ளது. வங்கியின் டிஜிட்டல் மாற்றியமைப்பு நிகழ்ச்சி நிரலின் மற்றுமொரு முக்கிய அங்கமாக இந்த அறிமுகத்தை மேற்கொண்டுள்ளது.

வாடிக்கையாளரை மையப்படுத்திய டிஜிட்டல் புத்தாக்கங்களினூடாக வாழ்க்கையை மேம்படுத்துவதற்கான வங்கியின் அர்ப்பணிப்பான செயற்பாடுகளுக்கான எடுத்துக்காட்டாக இந்த மெருகேற்றம் அமைந்துள்ளது.

மேம்படுத்தப்பட்ட UBgo app இனூடாக, பெருமளவு உள்ளடக்கமான, பாதுகாப்பான மற்றும் பரிபூரண வங்கியியல் அனுபவத்தை பெற்றுக் கொடுக்கும் வகையில் பல புதிய அம்சங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பாவனையாளர்களுக்கு தமது யூனியன் வங்கி கணக்கை அல்லது யூனியன் வங்கி கணக்கில்லாத வாடிக்கையாளர்களுக்கு Justpay ஊடாக சுயமாக இந்த சேவையை செயற்படுத்திக் கொள்ள முடியும். உயர் நுட்பத்திறன் வாய்ந்த பயோமெட்ரிக் உறுதி செய்யும் செயன்முறையினூடாக, பாதுகாப்பு மேம்படுத்தப்பட்டுள்ளது.

app இனால் இதர யூனியன் வங்கி கணக்குகளிலிருந்து பணத்தை கோர முடியும் என்பதுடன், முதலீடு மற்றும் கடன் கணிப்பான்கள் போன்ற பயனுள்ள சாதனங்களை வழங்குகின்றது. தேசப்பட காட்டி வசதியுடனான புதிய உள்ளம்சத்தினால், அருகாமையில் காணப்படும்கிளைகள் மற்றும் ATM களை கண்டறிய முடியும் என்பதுடன், கிரெடிட் கார்ட்கள் மீது ஒப்பற்ற கட்டுப்பாட்டை வழங்கும் வகையில் கார்ட் முகாமைத்துவ வசதிகள் போன்றன அமைந்துள்ளன.

360-பாகை இலாகா முகாமைத்துவத்துடன், பாவனையாளர்களுக்கு தமது நிதி நிலை தொடர்பான பரிபூரண தோற்றப்பாட்டை பெற்றுக் கொள்ள முடியும். புதிய மின்னஞ்சல் பெட்டி வசதியினூடாக, வங்கியினுள் தொடர்பாடல் வழிமுறை எளிமைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், இலகுவாக அணுகக்கூடிய வகையில் இலத்திரனியல் கூற்றுகளும் கிடைக்கின்றன.

UBgo app இனால் பணப் பரிமாற்றங்கள், கட்டணப் பட்டியல் கொடுப்பனவுகள், கொடுப்பனவு முகாமைத்துவங்கள், QR கொடுப்பனவுகள், நாணய மாற்று வீதங்கள், வட்டி வீதங்கள், 24/7 வாடிக்கையாளர் சேவை மற்றும் BBC, CNN ஊடாக செய்திகளை பெறல், புகையிரத அட்டவணை, ஊக்குவிப்புத் திட்டங்கள் மற்றும் ATM/கிளை கண்டறிதல் போன்ற வசதிகள் வழங்கப்படுகின்றன.

யூனியன் வங்கியின் மூன்று கட்ட டிஜிட்டல் மாற்றியமைப்பு பயணத்தில் முதல் கட்டமாக இந்தமேம்படுத்தல் அமைந்துள்ளது. புதிய மெருகேற்றத்தில் புதிய UI/UX, மேம்படுத்தப்பட்ட பயோமெட்ரிக் பாதுகாப்பு மற்றும் மாற்றியமைத்துக் கொள்ளத்தக்க உள்ளம்சங்கள் போன்றவற்றில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அடுத்த கட்டங்களில், டிஜிட்டல் கணக்கு ஆரம்பிப்பு, மேம்படுத்தப்பட்ட கொடுப்பனவு தெரிவுகள் மற்றும் பண டோக்கன் மயமாக்கம் போன்றவற்றுடன், AI மேம்படுத்தப்பட்ட டிஜிட்டல் வங்கிச் சேவைகள் போன்றன அடங்குகின்றன.

யூனியன் வங்கியின் டிஜிட்டல் வங்கிச் சேவைகளுக்கான உப தலைவர் மனிஷ பெர்னான்டோ கருத்துத் தெரிவிக்கையில்,

“மேம்படுத்தப்பட்ட UBgo app இன் அறிமுகத்துடன், எமது டிஜிட்டல் மாற்றியமைப்பு பயணத்தில் முக்கியமான படியை நாம் முன்னெடுத்துள்ளோம்.

எமது வாடிக்கையாளர்களுக்கு ஒப்பற்ற, பாதுகாப்பான மற்றும் புத்தாக்கமான வங்கியியல் அனுபவத்தை பெற்றுக் கொடுப்பது எமது இலக்காகும். இந்த மெருகேற்றம் ஆரம்பம் மட்டுமே. எமது வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்புகளை நிவர்த்தி செய்து விஞ்சுவது தொடர்பில் தொடர்ச்சியாக எமது சேவைகளை மேம்படுத்த எம்மை அர்ப்பணித்துள்ளோம்.” - என்றார்.